வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 04.09.2023 திங்கட்கிழமை | இதழ் : 268 | பக்கங்கள் : 16

# ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன்

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு



கொழும்பு, செப்ரெம்பர் 04

**ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன். அரசாங்க பிரதிநிதிகள் குழு ஒன்று கோயபல்ஸின் ஊடகக் கொள்கையை முன்வைத்து ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் சஜித் போட்டியிடமாட்டார் என்ற போலிச் செய்தியை கட்டமைத்து வருகின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையீட்டில் விவசாயத்துக்கு விடியல் வேலைத்திட்டத்தின்கீழ் 40 வருடங்களின் பின்னர் கிரிந்திஓயா திட்டத்துக்கு சொந்தமான தெற்கு கால்வாயை புனரமைக்கும் பணியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசாங்கப் பிரதிநிதிகளின் குழு ஒன்று கோயபல்ஸின் ஊடகக் கொள்கையை முன்வைத்து

11



## சண்டிலிப்பாய் விபத்தில் இளைஞன் பரிதாபப் பலி!

யாழ்ப்பாணம், செப். 04

அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் முன்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி - பின்னர் மின்கம்பத்துடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே பலியானார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அண்மையாக நேற்று பிற்பகல் 3.10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் பண்டத்தரிப்பு - சில்லாலையை சேர்ந்த பத்மநாதன் வசீகரன் (வயது 19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து பண்டத்தரிப்பு செல்லும் திசையில் இளைஞர் அதிவேகமாக

11

## 3 நாட்களுக்குள் ஏ. எல். பெறுபேறு வெளியாகும்!



கொழும்பு, செப். 04

உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் வெளியாகும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடத்துக்கான உயர்தர பரீட்சை திகதியை மாற்றுவது குறித்து எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

## இலங்கை முழுவதும் சிவபூமியே; விதுரவுக்கு வரலாறு தெரியாது!

### மறவன்புலவு சச்சிதானந்தன்



யாழ்ப்பாணம், செப். 04

இலங்கைத் தீவு முழுவதிலும் பல்லாயிரம் சைவக் கோயில்களே இருந்தன. இலங்கை சிவபூமி. புத்தர் வரும் போது இருந்தன சைவக் கோயில்கள் படிப்படியாக பௌத்தர்கள் விகாரைகளை கட்டத் தொடங்கினீர்கள். அப்பொழுது இருந்த கோயில்களே இன்று வரை தொடர்கின்றன. புதிதாக யாரும் தென்னிலங்கையில் சைவக் கோயில்களை கட்டவில்லை", இவ்வாறு கூறியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவரான மறவன் புலவு சச்சிதானந்தன்.

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்காக இந்து ஆலயங்கள் உள்ளன.

11

ஈஸ்டர் தாக்குதல்:

## சனல் 4 இன் ஆவணப்படம் நாளை

கொழும்பு, செப். 04

நாட்டில் நடந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்கள் அடங்கிய ஆவணப்படத்தை பிரித்தானியாவின் சனல் 4 வெளியிட போவதாக அறிவித்துள்ளது.

இந்த ஆவணப்படம் நாளை செவ்வாய்க்கிழமை வெளியாகும் என்று அந் தத் தொலைக்

11



## கடலுக்கு செல்ல வேண்டாம் மீனவர்களுக்கு எச்சரிக்கை!

### புதன் வரை மழை தொடரும்

கொழும்பு, செப். 04

காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை, புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான கடல் பிரதேசத்தில் காற்றின் வேகம் அதிகமாக காணப்படும். இதனால், இந்தப் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு

11

## தமிழர் பகுதிகளில் பௌத்தம் புகுத்தப்படுவதை ஏற்கமுடியாது!

### இராஜாங்க அமைச்சர் சுரேன்

கொழும்பு, செப். 04

தமிழர் பகுதிகளில் புகுத்தப்படுகின்ற பௌத்த பண்பாட்டு அம்சங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் விகாரைகளை புகுத்துவது சட்டவிரோதமான செயல். வடக்கு மாகாணத்தில் தற்போது காணப்படுகின்ற பௌத்த பண்பாட்டு சின்னங்கள் தமிழ் மக்களின் உரிமைகளாகும்.

ஆனால், தற்போது புகுத்தப்படுகின்ற அம்சங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நேற்றைய தினம் அவர் வானொலி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## 13ஐ நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை தாமதமாகும்?

கொழும்பு, செப். 04

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், அதிகாரப் பகிர்வு விடயங்கள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் காலதாமதமாகும் என்று அரச உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

ஐ. நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர், சர்வதேச நாணய நிதியத்தின் தவணை கொடுப்பனவுக்கான மீளாய்வு உள்ளிட்ட விடயங்கள் நிறைவடைந்த பின்னரே இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய நிலையில் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார்.

இதனையடுத்து, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் குறித்த விடயங்கள்

11

## 4 மணி நேரத்துக்கு ஒருவர் தவறான முடிவெடுத்து பலி!

கொழும்பு, செப். 04

நாட்டில் 4 மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்கின்றனர் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் 40 வீதமானோர் கல்வி கற்றவர்கள். இவர்களுள் 22 வீதத்தினர் பட்டப்படிப்பை முடித்தவர்கள்.

நாட்டில் அண்மை நாட்களாக தவறான முடிவை எடுத்து உயிரிழப்போரின் எண்ணிக்கை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தியோராம் ஆண்டு, இந்தியாவின் சில பகுதிகளை சீனா ஆக்கிரமித்தது. அப்போது ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தார்.

பாராளுமன்றத்தில் ஆக்கிரமிப்பு பற்றி ஏகப்பட்ட சலசலப்பு.

அப்போது நேரு, 'சீனா சில பகுதிகளைப் பிடித்திருப்பது உண்மைதான். ஆனால், அவை ஒன்றுக்கும் பயன்படாத பகுதிகள். அங்கு புல் பூண்டுகூட முளைக்காது.' என்றார்.

உடனே சிறந்த பாராளுமன்றவாதியான மகாவீர் தியாகி எழுந்து, 'இதோ, என் தலையைப் பாருங்கள்' என்று கூறி தனது வழுக்கைத் தலையைக் காட்டினார். பின் அவர் கேட்டார், 'என் தலையில்கூட ஒன்றும் முளைக்கவில்லை. அதனால் அது பயனில்லாத பகுதி என்று சொல்வீர்களா?'

நேரு உட்பட அனைவரும் சிரித்து விட்டார்கள்.

இந்தச் சம்பவம்தான் அந்த செய்தியைப் படித்தபோது எனக்கு நினைவுக்கு வந்தது.

'13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பிலேயே இல்லை. 13 அரசமைப்பில் இருக்கிறதா இல்லையா என்று ஆய்வுசெய்யக்கூடிய - அது சம்பந்தமாக முடிவாக சொல்லக்கூடியது உச்சநீதிமன்றம். அந்த உச்சநீதிமன்றம் 1987ஆம் ஆண்டே தனது தீர்ப்பில் அதிகாரப் பகிர்வு ஒற்றையாட்சிக்குள் கிடையாது என்று சொல்லியுள்ளது. 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதால் அதிகாரப் பகிர்வு கிடையாது. அதிகாரங்கள் முழுக்க முழுக்க கொழும்பின் (மத்திய அரசின்) கையிலேயே இருக்கும்.

அந்த 9 நீதியரசர்கள் கொண்ட (பெரும்பான்மையான வர்களின்) தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு கிட்டத்தட்ட 30 தீர்ப்புகள் வந்துள்ளன. இதில், 2014ஆம் ஆண்டு சோழமுத்து இராசனின் வழக்கில் பிரதம நீதியரசர் வழங்கிய தீர்ப்பில் - மத்திக்கும் மாகாணத்துக்கும் இடையிலே 13ஆம் திருத்தத்தில் முரண்பாடு வரமுடியாது. ஏனென்றால், சட்டம் மிகத் தெளிவு - மத்தியின் கையில் மட்டுமே அதிகாரம். மாகாணத்துக்கு அதிகாரம் கிடையாது. காணி அதிகாரம் தொடர்பிலேயே மிக விசேடமாக இந்தத் தீர்ப்பு அமைந்தது.'

மேற்கண்டவாறு கூறியிருப்பவர் யார் என்று நான் இங்கே எழுதித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதும் தெளிவானது. அதிகாரங்களை ஒற்றையாட்சிக்குள் பகிரமுடியாது என்கிறார். அதாவது ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தை பகிரமுடியாது என்பதால் ஒற்றையாட்சிக்குள் இருக்கும் பதின்மூன்றில் உள்ள மாகாணத்துக்கு அதிகாரம் இல்லை என்கிறார்.

அத்துடன் நிறுத்தியிருந்தாலும் பரவாயில்லை, உயர்நீதிமன்ற தீர்ப்பை வேறு துணைக்கு அழைக்கிறார். கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது அந்த அமைச்சின் சட்ட ஆலோசகராக இருந்த மொஹான் பீரிஸ் தலைமை நீதிபதியாக இருந்தபோது வழங்கிய தீர்ப்பு ஒன்றைக் குறிப்பிடும் கஜேந்திரகுமார், தீர்ப்பின் கடைசிப் பகுதியை மட்டும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த தீர்ப்பிலேயே பதின்மூன்றில் காணி, பொலிஸ் அதிகாரங்களை பகிர்வதற்காக காணி ஆணைக்குழுவும் பொலிஸ் ஆணைக்குழுவும் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ள உயர்நீதிமன்ற தீர்ப்பு அந்த ஆணைக்குழுக்கள் அமைக்காததுதான் இந்தப் பிரச்னைக்கு காரணம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

ஆக, மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டுக்கும் தனித்தனி ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். பிரேமதாஸ காலத்திலேயே பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோதிலும் அதனை நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் எவரும் செயல்பட அனுமதிக்கவில்லை.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காணி ஆணைக்குழு அமைக்கப்படும் என்கிறார். பொலிஸ் ஆணைக்குழு பற்றி - அதாவது பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதா என்பது பற்றி பாராளுமன்றம் முடிவெடுக்க வேண்டும் என்கிறார். அப்படி முடிவெடுத்தால் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆணைக்குழுவை இயங்குவதற்கு தான் அனுமதி வழங்க தயாராக இருக்கிறார் என்றும் கூறியிருக்கிறார்.

இன்று இந்தப் பத்தியில் நாம் சொல்ல வருவது, அது பற்றியல்ல, மாகாண சபைகளின் கீழ்தான் இன்றைய உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. அதன் தேர்தல்களை நடத்துகின்ற அதிகாரம் மட்டுமே மத்தியிடம் உண்டு. ஆனால், அவற்றை நிர்வகிக்கின்ற அதிகாரம் மாகாண சபைகளிடமே உண்டு. அந்த சபைகளுக்கு நடக்கின்ற தேர்தல்களில் பங்குபற்றி அவற்றில் உறுப்பினர்களாக இருக்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அடுத்து நடக்கின்ற மாகாண சபை தேர்தல்களில் போட்டியிடாது என்று பகிரங்கமாக இப்போது அறிவிக்குமா?.

பதின்மூன்று குறித்து விவாதத்துக்கு அழைக்கின்றார் கஜேந்திரகுமார், அவரை பகிரங்க சவாலுக்கு உட்படுத்த இந்த ஊர்க்குருவி அழைக்கின்றது. அவர் இப்போதே மாகாண சபை தேர்தல்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடாது என்று அறிவிக்கத் தயாரா?.

**- ஊர்க்குருவி.**

### நாமலின் திருமணத்துக்கு மின்சாரம்:

# விசாரணை நடத்த உத்தரவிடுமாறு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்!

கொழும்பு, செப். 04

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்துக்காக வீரகெட்டிய இல்லத்துக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்க அரச கணக்காய்வாளர் நாயகத்துக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றம் முன்னிலையில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஈ. ஜே. விஜித்த குமார இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக இலங்கை மின்சார சபை, அதன் தலைவர் என். எஸ். இலங்ககோன், முன்னாள் தலைவர் ரகித்த ஜெயவர்த்தன, கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி. சி. விக்ரமரத்ன, மின்சக்தி எரி சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக, சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவம் 2019 செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வீரகெட்டியவில் அமைந்துள்ள வீட்டில் நடைபெற்றதாக மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அந்த வைபவத்தில் பயன்படுத்தப்பட்ட மின்சாரம் தொடர்பில் கட்டணமாக 26 இலட்சத்து 82 ஆயிரத்து 246 ரூபாய் 57 சதம் அறவிடப்பட வேண்டும் என மனுதாரர் உயர் நீதிமன்றுக்கு குறித்த மனு ஊடாக குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண நிகழ்வு நடந்த காலப்பகுதியில், வீரகெட்டிய வீடு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு பாதுகாப்பான மின் விளக்குகளை பொருத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் டி. வி. சானக, மின்சக்தி எரி சக்தி அமைச்சரிடம் கோரிக்கை முன் வைத்துள்ளார்.

இதன்படி அப்போதைய மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் இதற்கான உத்தரவை இலங்கை மின்சார சபை அதிகாரிகளுக்கு அளித்துள்ளதாகவும் அது தொடர்பிலான கட்டணத்தை உரியவர்கள் செலுத்துவர் என இதன்போது அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை குறித்த கட்டணம் செலுத்தப்படவில்லை என கூறும் மனுதாரர், பிரதிவாதிகள் தமது அதிகாரத்தை மோசடியான முறையில் பயன்படுத்தி மின்சாரத்தைரத்தை பெற்றுக்கொண்டு, கட்டணத்தை செலுத்துவதை புறக்கணித்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இது இவ்வாறிருக்கையில், தனது வீட்டில் 7 ஆயிரத்து 390 ரூபாய் மின் கட்டண நிலுவையை காரணம் காட்டி, மின்சார சபையினர் மின் கட்டமைப்பை துண்டித்து சென்றதாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பெரும் கட்டண நிலுவை ஒன்று இருக்கையில் வீரகெட்டிய மகிந்த ராஜபக்ஷ வீட்டுக்கு மின் துண்டிப்பை செய்யாது, ஒப்பீட்டளவில் சிறிய தொகை ஒன்றிருக்கும் தனது வீட்டில் மட்டும் மின்சார இணைப்பை துண்டித்து சென்ற இலங்கை மின்சார சபையின் நடவடிக்கையானது சட்டத்தின் முன் அனைவரும் சமன் எனும் அரசமைப்பின் அடிப்படை சித்தாந்ததுக்கு மாற்றமாக உள்ளதாக மனுதாரர் கூறியுள்ளார்.

இது இலங்கையின் அரசமைப்பின் 12(1) ஆம் உறுப்புரை ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறும் செயல் என தீர்மானிக்குமாறும் மனுதாரர் உயர் நீதிமன்றைக் கோரியுள்ளார்.

இதனைவிட, 2019 செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வீரகெட்டிய வீட்டுக்கு மின்சாரம் வழங்கியமை தொடர்பிலான அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றில் கையளிக்க இலங்கை மின்சார சபைக்கு உத்தரவிடுமாறும், அந்த வீட்டுக்கு மின்சாரம் வழங்கியமை ஊடாக இலங்கை மின்சார சபை தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக அறிவிக்குமாறும் மனுதாரர் நீதிமன்றை கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# இணுவில் சிவகாமி அறநெறியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழா!

யாழ்ப்பாணம், செப். 04

இணுவில் சிவகாமி அறநெறி பாடசாலையின் 25ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இந்து தர்மாசிரியர் இ. கிருஷ்ணராஜ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறீகணேசன் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சுப்பிரமணியம் உதயபாலன், உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அறநெறி பாடசாலை மாணவ சிறார்களின் பல்வேறு கலைநிகழ்வுகள் நடைபெற்றன. மேற்படி நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மாணவ சிறார்களுக்கும் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



# 4 கடலாமைகளின் உடல்கள் நெடுந்தீவில் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 04

நெடுந்தீவு கடற்கரையில் நான்கு கடல் ஆமைகள் இறந்து கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டன என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஒரு மாதத்துக்குள் 35 ஆமைகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி முதல் மேற்கு கடற்கரையில் 31 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கின.

மேலும் 3 ஆமைகளின் ஓட்டில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுக்கான சிகிச்சைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வெடி மருந்தை பயன்படுத்தி மீன் பிடித்தமை காரணமாகவே மேற்கு கடற்கரையில் கடலாமைகள் உயிரிழந்தன என்று கூறப்படுகின்றது.

ஆமைகளின் உடல்களில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளில் இந்த விடயம் தெரியவந்தது.

இது தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
04.09.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# விதுர விக்ரமநாயக்கவின் அறிவு

தென்னிலங்கையின் பெரும்பாலான அரசியல்வாதிகள் சிங்கள மக்களுக்கு உண்மைகளை கூற முடியாதவர்களாகவே இருக்கின்றனர். மக்களுக்கு உண்மைகளை கூற வேண்டுமாயின் - முதலில் அவர்கள் இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வரவேண்டும். வடக்கு, கிழக்கில் ஏன் விகாரைகளை நிர்மாணிக்கக்கூடாது - இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்கு இந்து ஆலயங்கள் உள்ளன - அவ்வாறாயின் வடக்கு, கிழக்கில் விகாரைகளை நிர்மாணிப்பதில் என்ன பிரச்னை? வடக்கு, கிழக்கில் விகாரைகளை நிர்மாணிக்கக்கூடாதென்று சட்டம் இருக்கின்றதா - இவ்வாறு புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

மேலோட்டமாக பார்த்தால், அமைச்சர் கூறுவது சரி போல் தெரியலாம். 25 மாவட்டங்களில் - தமிழ் மக்களுக்கு ஆலயங்கள் இருக்கின்றபோது, வடக்கு, கிழக்கில் சிங்கள மக்களுக்கு விகாரைகள் அமைக்கப்படுவதை ஆட்சேபிப்பது நியாயமற்ற ஒரு செயலாக தெரியலாம். ஆனால், விடயத்தை ஆழமாக நோக்கினால், அமைச்சர் அறிவுக்கு பொருத்தமில்லாத வகையில் பேசுவதைக் காணலாம்.

தமிழர் தரப்பிலிருந்து இது தொடர்பில் அறிவுபூர்வமான பதில் வழங்கப்படவில்லை. ஈழம் சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் மட்டுமே அறிவுபூர்வமாகவும் தெளிவாகவும் பதிலளித்திருக்கின்றார். அவரின் அறிக்கையானது, புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் கூற்றிலுள்ள அபத்தத்தை அம்பலப்படுத்துகின்றது.

தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு ஆலயங்கள் இருக்கின்றன - அங்கு தேர்த் திருவிழாவும் நடைபெறுகின்றது. சிங்கள மக்களும் அதில் பங்கு கொள்கின்றார்கள். இதேபோன்று வடக்கு, கிழக்கிலுள்ள பிரபலமான ஆலயங்களுக்கு சிங்கள மக்கள் வந்து செல்கின்றனர். அவர்கள் இந்துக் கடவுள்கள் மீது பக்தியுடன் இருக்கின்றனர். தமிழ் மக்களும் பௌத்தத்தை எதிர்க்கவில்லை. மாறாக மதிக்கின்றனர். அம்பேத்கரின் வார்த்தையில் கூறுவதானால், பௌத்தம் ஒரு மதமே அல்ல மாறாக - அது ஒரு தத்துவம்.

இன்றும் சில சிந்தனையாளர்கள் - குறிப்பாக, தலித்திய சிந்தனையாளர்கள் சிலர் பௌத்தத்தை விடுதலைக்கான மார்க்கமாக முன்வைக்கின்றனர். இங்கு பௌத்தத்தின் மீதான வெறுப்பு என்று ஒன்றில்லை. அடிப்படையில் இது மதப் பிரச்னையும் அல்ல. மாறாக இது ஓர் அரசியல் பிரச்னை. தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அச்சத்தின் விளைவாகவே புதிய விகாரைகள் சிக்கலுக்குரியவையாக நோக்கப்படுகின்றது. கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு விகாரைகளின் விரிவாக்கம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், வடக்கிலும் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற நோக்கம் இருகின்றதா - என்னும் அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

தென்னிலங்கையில் எந்தவொரு புதிய ஆலயங்களையும் தமிழ் மக்கள் நிர்மாணிக்கவில்லை. அவ்வாறான தேவைகளும் தமிழ் மக்களுக்கு இல்லை. வரலாற்றில் பின்நோக்கி சென்றால் சைவர்களே இலங்கைக்கு உரிமைகோரும் தகுதியுள்ள மக்கள். அந்த மக்களில் ஒரு பகுதியினர், குறிப்பிட்ட காலத்தில் பௌத்தத்தையும் தழுவியிருக்கின்றனர். அதன் எச்சங்கள் வடக்கு - கிழக்கில் இருக்கின்றன. திருகோணமலையிலுள்ள வில்கம் விகாரையிலிருந்து, குருந்தூர்மலை வரையில் தமிழ் பௌத்தத்தின் எச்சங்கள் இருக்கலாம். ஆனால், இலங்கையின் தொல்லியல்துறையோ இந்தக் கண்ணோட்டத்தில் விடயங்களை நோக்கவில்லை. வெறுமனே விடயம் சிங்கள - தமிழ் விவகாரமாக மட்டுமே நோக்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் அச்சம் நியாயமானது. அந்த அச்சத்தை புரிந்து கொண்டால் இந்தப் பிரச்னையை இலகுவாக கையாள முடியும். ஆனால், இந்த விடயத்தை பரந்த கண்ணோட்டத்தில் நோக்குவதற்கு புத்தசாசன அமைச்சரும் தயாராக இல்லை தென்னிலங்கையின் அரசியல்வாதிகளும் தயாராக இல்லை. இது பற்றிப் பேசினால், எங்கு தங்களின் வாக்கு வங்கி பாதிக்கப்பட்டுவிடுமோ என்றே அனைவரும் யோசிக்கின்றனர். பிரச்னை இங்குதான் இருக்கின்றது.

# 77 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

*கொழும்பு, செப். 04*

*நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் தற்போது 77 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*அவசர கொள்வனவின் கீழ் 400 வகையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு, மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இந்திய கடன் திட்டங்களின் கீழ் பெறப்பட்ட 378 வகையான மருந்துகள் இது வரை மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.*

*கடந்த வருடம் உலக வங்கியின் உதவியுடன் 23 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.*

*ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 46.7 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

# கைத்தொழில் கண்காட்சி நேற்றுடன் நிறைவடைந்தது

*யாழ்ப்பாணம், செப். 04*

*யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கைத்தொழில் உற்பத்தி கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகின.*

*இந்தக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய கலாசார மத்திய நிலைய வளாகத்தில் இடம்பெறுகின்றது.*

*கைத்தொழில் அமைச்சும், கைத்தொழில் அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் திஸநாயக்க கலந்து கொண்டார்.*

*சிறப்பு அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கலந்து கொண்டார்.*

*இந்த நிகழ்வில் திணைக்களம் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள், கைத்தொழில் அதிகார சபை அதிகாரிகள், ஊழியர்கள், உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.*






*இதன்போது, இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கைத்தொழில் உற்பத்தி கண்காட்சிக்கூடத்தை பார்வையிட்டனர்.*

*கடந்த முதலாம் திகதி ஆரம்பமான குறித்த கண்காட்சி நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.*

*இக் கண்காட்சி கூடத்தில் நாடளாவிய ரீதியிலிருந்து வருகை தந்த கைத்தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தியதுடன் சந்தைப் படுத்தலிலும் ஈடுபட்டிருந்தனர். (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

வரவை விட செலவு அதிகரிக்கும். இன்று நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் இழுபறியாகும். திடீர் செலவுகளை சந்திப்பீர். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும்.

**இடபம்**

உங்கள் நீண்டநாள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். நிதிநிலை உயரும். நினைத்ததை சாதிப்பீர். உங்கள் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள்.

**மிதுனம்**

வியாபாரத்தில் உங்கள் முயற்சி ஆதாயமாகும். குடும்பத்தினர் ஆதரவு அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். அரசு வழியில் நீங்கள் மேற்கொண்ட முயற்சி நிறைவேறும்.

**கடகம்**

குடும்பத்தினர் விருப்பத்தை அறிந்து அதைப் பூர்த்தி செய்வீர். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். தடைபட்ட வேலை மீண்டும் நடைபெற ஆரம்பிக்கும். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்**

கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். புதிய முயற்சி களை ஒத்திவைப்பது நல்லது. உங்கள் முயற்சி தாமதமாகும். செயல்களில் சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள். அலைச்சல் உண்டாகும்.

**கன்னி**

உங்கள் முயற்சி ஆதாயத்தை ஏற்படுத்தும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்ப்பு கூடும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். நண்பர்கள் ஒத்துழைப்புடன் ஒரு செயல் நிறைவேறும்.

**துலாம்**

பாட்டியாளர்கள் விலகிச் செல்வர். எதிர்ப்புகளை முறியடித்து உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர். சிந்தித்து செயல்படுவீர். நண்பர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சியில் வெகுமுன்னேற்றம் அடைவீர்.

**விருட்சிகம்**

மற்றவரை நம்பி ஒப்படைக்கும் வேலை இழுபறியாகும். உங்கள் செயல்களில் கூடுதல் கவனம் தேவை. தொழிலை விரிவு படுத்தும் முயற்சி நிறைவேறும். பணியாளர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு**

உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ள உழைப்பீர்கள். அதற்கேற்ற லாபத்தையும் அடைவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். நண்பர்கள் ஆதரவுடன் நினைத்ததை அடைவீர்.

**மகரம்**

துணிச்சலுடன் செயல்பட்டு நீண்டநாள் முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர். எதிரிகள் விலகுவர். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமை வெளிப்படும். புதிய பொறுப்பு வரும். மற்றவர்கள் பாராட்டுவார்கள்.

**கும்பம்**

நெருக்கடி நீங்கும். தடைபட்டிருந்த முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சுறுசுறுப்புடன் செயல்பட்டு நீங்கள் விரும்பியதை அடைவீர். வரவேண்டிய பணம் வரும்.

**மீனம்**

மனதில் தேவையற்ற குழப்பம் வரும். செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். விழிப்புணர்வு தேவையான நாள். எதிர்பார்த்த பணம் வரும். உங்கள் நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும்.

# இந்துராஷ்டிர இலக்கை அடையவே ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் வகுப்பு

## ம. தி. மு. க. கட்சி சாடல்

சென்னை, செப். 04

இந்துராஷ்டிர இலக்கை அடைவதற்காக பல்வேறு சட்ட ரீதியான ஆயத்தப் பணிகளை, பரிசோதனைகளை செய்துவருகிறது என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“2014 இல் நரேந்திர மோடி தலைமையில் பாரதிய ஜனதா கட்சி அரசு பொறுப்பேற்றதிலிருந்து ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே கல்வி முறை, ஒரே வரி, ஒரே குடும்ப அட்டை என்று எல்லாவற்றையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து டில்லியில் அதிகாரங்களை குவித்து வைத்துக் கொண்டு எதேச்சதிகார ஆட்சி நடத்துகிறது.

இதன் உச்சகட்டமாக ஒரே நாடு ஒரே தேர்தல் என்று நீண்ட காலமாக பா. ஜ. க. கூறி வரும் திட்டத்தைச் செயல்படுத்த மோடி அரசு தீவிரமாக முனைந்திருக்கிறது.

இந்திய குடியரசின் முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்திட ஒன்றிய பா. ஜ. க. அரசு குழுவை அறிவித்திருக்கிறது.

குடியரசு தலைவர் பதவியில் இருந்தவரை மரபுகளை மீறி இத்தகைய குழுவுக்கு தலைவராக நியமித்த மோடி அரசின் செயல் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல் கண்டனத்துக்குரியது.

மோடி தலைமையில் ஆட்சியில் அமர்ந்திருக்கும் பாசிச ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க, தனது இந்துராஷ்டிர இலக்கை அடைவதற்காக பல்வேறு சட்டரீதியான ஆயத்தப் பணிகளை, பரிசோதனைகளை செய்துவருகிறது.

மக்களாட்சி கோட்பாடுகளின் ஆணிவேர்களை அறுத்து எரிந்து பாராளுமன்ற ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து, சர்வாதிகார இந்துராஷ்டரத்தைக் கட்டமைக்கத் துடிக்கும் ஆர். எஸ். எஸ் - பா. ஜ. கவின் திட்டத்தை ஜனநாயக முற்போக்கு சக்திகள் கரம் கோர்த்து முறியடிக்கவேண்டும்” - என்றார். (ஐ)

# நடிகர் ரஜினிகாந்துடன் ஓ. பி. எஸ். திடீர் சந்திப்பு

சென்னை, செப். 04

நடிகர் ரஜினிகாந்தை அவரது இல்லத்தில், முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், நேற்று முன்தினம் சந்தித்தார். இது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அ. தி. மு. கவில் கடந்த ஆண்டு ஒற்றைத் தலைமை சர்ச்சை தொடங்கி பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை பழனி சாமி கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து ஓ. பன்னீர்செல் வம், அ. தி. மு. க. பொதுக்குழு செல்லாது என உச்சநீதிமன்றம் வரை சென்றும், பொதுக்குழு தீர்மானங்கள் செல்லாது என சென்னை உயர் நீதிமன்ற அமர்வு வரை சென்றும் அவ ருக்கு சாதகமாக தீர்ப்பு அமைய வில்லை.

இந்நிலையில், நடிகர் ரஜினி காந்தை, சென்னை போயஸ் தோட்டத்தில் உள்ள அவரின்



இல்லத்தில் ஓ. பி. எஸ். நேற்று முன்தினம் சந்தித்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

தற்போது ஓ. பி. எஸ். சந்தித்துள்ளது மரியாதை நிமித்த மானது எனக் கூறப்பட்டாலும், அரசியல் நிலவரம் குறித்து பேசினர் என்று தெரிகிறது. (ஐ)

# சீமானின் நாம் தமிழர் கட்சியைவிட 30வீத வாக்குகள் அதிகம் பெறுவோம்!

கோவை, செப். 04

சீமானின் சவாலை ஏற்க பா. ஜ. க. தயார். நாம் தமிழர் கட்சியைவிட 30 சதவீத வாக்குகளை கூடுதலாக வாங்கிக் காட்டுவோம் என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

கோவை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

ஒவ்வோர் ஆண்டும் 8 மாநிலங்களுக்குத் தேர்தல்கள் நடைபெறுவதால், கொள்கை முடிவு எடுக்க முடிவதில்லை. எனவேதான், ஒரே நாடு, ஒரே தேர்தலைக் கொண்டு வருகிறோம். அ. தி. மு. க. , த. மா. கா. உள்ளிட்ட கட்சிகள் இதை வரவேற்றுள்ளன.

மத்திய அரசு தமிழகத்துக்கு எதுவும் செய்யவில்லை என்று முதல்வர் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார். ரூ.10.76 இலட்சம் கோடி மதிப்பிலான பணிகளை மத்திய அரசு தந்துள்ளதை வெள்ளை அறிக்கையாக வெளியிட்டுள்ளோம். ஊழல் குற்றச்சாட்டு இருப்பவர்கள் ‘இந்தியா’ கூட்டணியில் உள்ளனர்.

எனவே, வரும் மக்களவைத் தேர்தலில் பா. ஜ. க. கூட்டணி 400 இடங்களுக்கும் அதிகமாக வெற்றி பெறும். மாணவர்களுக்கு காலை உணவு வழங்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அந்த திட்டத்துக்கு தி. மு. க. சொந்தம் கொண்டாடாமல், சிறப்பாக செயல்படுத்த வேண்டும். நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் சவாலை ஏற்க பா. ஜ. க. தயார்.

அவர்களைக் காட்டிலும் 30 சதவீதம் வாக்குகளை கூடுதலாக வாங்கிக் காட்டுவோம். சீமானை யாரும் சேர்க்கவில்லை என்பதால்தான், அவர் தனித்துப் போட்டியிடுகிறார். அ. தி. மு. க. மாநாட்டுக்கு ஆட்களை அழைத்து வந்ததாக நான் கூறவில்லை. ஒரு கட்சியைப் பிரித்து, மற்றொரு கட்சியை வளர்க்க வேண்டும் என்று நான் கருதியதில்லை- என்றார். (ஐ)

# இந்தியா கூட்டணியில் இணையும் கமலின் மக்கள் நீதி மய்யம் கட்சி?

சென்னை, செப். 04

பாராளுமன்ற தேர்தலில் தனித்து போட்டியா அல்லது கூட்டணி அமைத்து போட்டியா என்பது குறித்து வெளிநாட்டில் இருந்து கமல்ஹாசன் திரும்பியதும் முடிவு என கட்சியின் செய்தித் தொடர்பாளர் முரளி அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு சாத்தியமில்லாத ஒன்று. பா. ஜ. க. அரசு மாற்றப்பட வேண்டும். 10 ஆண்டுகளுக்கும் மேல் இருக்கக்கூடாது என கமல்ஹாசன் கருதுகிறார்.

காங்கிரஸ்தான் மாற்று என எண்ணத்தில் கமல் உள்ளார். ராகுல் காந்தியுடன் இணக்கமாகவும் இவர் இருக்கிறார். தேர்தலில் கூட்டணியா? தனித்து போட்டியா? என்பது கமல்ஹாசன் வெளிநாட்டிலிருந்து வந்த பின் முடிவு செய்யப்படும்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய மு. க. ஸ்டாலின் அழைப்பு விடுத்ததில் நியாயமான கருத்துள்ளதை புரிந்து கொண்டுள்ளோம். இந்தியா கூட்டணியில் செப்ரெம்பருக்குள் தொகுதிப் பங்கீடு முடியுமா? என கூற முடியாது. நிறைய கட்டங்கள் உள்ளன. கமல்ஹாசனின் அறிவிப்புக்காகக் காத்திருக்கிறோம் - என்றார். (ஐ)

### மண்டைதீவு, ஊர்காவற்துறைக்கு

# 3 நாளுக்கு ஒருமுறையே குடிதண்ணீர் விநியோகம்!

யாழ்ப்பாணம், செப். 04

**கடும் வறட்சியால் இன்று திங்கட்கிழமை தொடக்கம் மண்டைதீவு, ஊர்காவற்துறை பிரதேசங்களுக்கு தற்காலிகமாக 3 நாள்களுக்கு ஒரு முறையே குடிதண்ணீர் விநியோகிக்கப்படும் என்று தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் வே. உதயசீலன் அறிவித்துள்ளார்.**

தற்போது மண்டைதீவு, ஊர்காவற்துறை பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் பெறப்படும் நிலையங்களில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாகவே இந்த முடிவு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வறட்சியால் மக்களின் பாவனை வீதமும் அதிகரித்துள்ளது. இதனால் விநியோகத்துக்கான குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மழையால் உருவாக்கப்படும் நிலத்தடி நீர் நிலைகளை நம்பியே நீர் விநியோகத் திட்டங்கள் உள்ளன. நீர் நிலைகள் அற்று போகுமானால் குடிதண்ணீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்படும்.

எனவே, குடிதண்ணீரை வீண் விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாக குடிக்கவும், சமையல் தேவைக்கும் மட்டும் பயன்படுத்துமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# சிறுமியின் கை அகற்றம் விசாரணை நடக்கிறது!

### யாழ். போதனா மருத்துவமனை

யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட 8 வயது சிறுமி ஒருவருக்கு சத்திர சிகிச்சை மூலம் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை இடம்பெற்று வருவதாக போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிறுமி சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு ஊசி மருந்து செலுத்துவதற்காக பொருத்தப்பட்ட 'கனிலா'வினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அவரின் கை மணிக்கட்டுடன் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

இது குறித்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியை தொடர்பு கொண்ட போது, சம்பவத்தை அவர் உறுதி செய்தார்.

அத்துடன், "கனிலா செலுத்திய போது அல்லது மருந்து செலுத்தும் போது அருகில் இருந்த நாடி சேதமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இதனால் கையின் கீழ் பகுதிக்கு இரத்தம் செல்ல முடியாமல் கை செயலிழந்துள்ளது. இதனால் கையை அகற்ற வேண்டியேற்பட்டுள்ளது. அது தொடர்பான பூரண விசாரணை நடந்து கொண்டிருக்கிறது", என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஐ)

# தேர்தல்கள் திணைக்களத்தின் யாழ். பணிமனை திறந்துவைப்பு




யாழ்ப்பாணம், செப். 09

புதிதாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் தேர்தல்கள் திணைக்கள பணிமனை நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுல் பிரதம விருந்தினராக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் புதிய கட்டடத்துக்கான பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்ததுடன் கட்டடத்தையும் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில், தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆ. சிவபாலசுந்தரன் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதுவரை காலமும் யாழ். மாவட்ட செயலகத்திற்குள் இயங்கி வந்த தேர்தல்கள் திணைக்கள பணிகள் இனி யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய பணிமனையில் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் துர்நாற்றம் வீசும் வாய்க்கால்கள்!





யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணம் மாநகரின் மத்தியில் இரு மருங்கிலும் காணப்படும் பிரதான கழிவுநீர் வாய்க்கால்கள் நீண்டநாட்களாக துப்புரவு செய்யப்படவில்லை. இதனால், பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனை, பிரதான பேருந்து தரிப்பிடம், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் பல உள்ள பகுதியில் இந்த வாய்க்கால்கள் அமைந்துள்ளன.

இவை நீண்டநாட்களாக சுத்தம் செய்யப்படவில்லை. பொலித்தீன்கள், போத்தல்கள் நிறைந்துள்ளதால் கழிவுநீர் ஓடுவது தடைப்பட்டு தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது. இவற்றில், நுளம்புகள் பெருகுவதால் நோய்களும் பரவும் அபாய நிலை உள்ளது.

நோயாளர்கள், மற்றும் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்பவர்கள், சுற்றுலா பயணிகள் என் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தப் பகுதியை தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு ஏராளமானவர்கள் தினமும் பயன்படுத்தும் இந்தப் பகுதியை உரிய தரப்பினர் உடனடியாகக் கவனத்தில் கொண்டு தூய்மைப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-ரி)

# ஐந்து ஆயிரம் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேற முயற்சி!



### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

யாழ்ப்பாணம், செப். 04

சுமார் 5 ஆயிரம் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சியில் இருக்கின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் மருத்துவர் விஜயரத்னசிங்கம் தர்ஷன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இருக்கும் மருத்துவர்களில் 95 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையை பொறுத்தவரை மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட பெரும்பான்மையை நாங்கள் பிரதிபலிக்கின்றோம். இவ்வாறான தொழிற்சங்கமாக இருக்கின்றபடியால் நாங்கள் சுகாதாரத்துறை சம்பந்தமான பிரச்னைகளில் அக்கறை செலுத்துவதும் அதில் ஏற்படுகின்ற சாதக, பாதக நிலைமைகள் பற்றி ஆராய்வதிலும் அக்கறை செலுத்தி வருகின்றோம்.

அவ்வாறே இந்த மருந்து தட்டுப்பாடு சம்பந்தமாகவும் புத்திஜீவிகள் வெளியேற்றம் - முக்கியமாக மருத்துவர்களின் வெளியேற்றம் தொடர்பாக கடந்த காலங்களில் நாங்கள் சுகாதார துறைக்கும் அரசாங்கத்துக்கும் எங்களுடைய முன்மொழிவுகளை வழங்கி இருந்தோம்.

அது உத்தியோகபூர்வமான கூட்டங்களில் பரிசீலிக்கப்படுவதாக கூறப்பட்ட போதும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. முதலாவதாக மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் தட்டுப்பாட்டை உற்று நோக்குவமாக இருந்தால் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இது நிலவி வருகின்றது.

அதுமட்டுமில்லாமல் தற்போது மருந்தின் தரம் இன்மை தன்மையும் ஆங்காங்கே நிலவி வருகின்றது. அடுத்து புத்திஜீவிகள் இந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பிரதானமான நிலைமை நாட்டின் பொருளாதார நிலமையும் அதனால் ஏற்பட்ட வாழ்க்கை செலவினமும் மற்றும் எதிர்கால சந்ததியினரின் ஸ்திரத்தன்மை என்பதும் இதில் பெருமளவு செல்வாக்கு செலுத்துகின்றது.

கிட்டத்தட்ட சுகாதார அமைச்சர் தெரிவித்ததின்படி 850 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள் மேலும், 5 ஆயிரம் வரையிலான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சிகளில் இருக்கின்றமையும் எங்களுக்கு தெரிய வந்திருக்கின்றது - என்றார்.

(ஐ)

# கொழும்பில் கடும் மழை பல பகுதிகள் வெள்ளத்தில்!





கொழும்பு, செப். 04

கொழும்பில் நேற்றுப் பெய்த கடும் மழையால் கோட்டை, மருதானை, பஞ்சிகாவத்தை, பொரளை, சேதவத்தை, ஆர்மர் வீதி உள்ளிட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன், பல பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. அத்துடன், வாகனங்கள் பலவும் சேதமடைந்துள்ளன என்று தெரியவருகின்றது.

கொழும்பு - கிராண்ட்பாஸ் உள்ளிட்ட பகுதிகளில் பல வணிக வளாகங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால், பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. (ஐ)

# பொய் தகவல் வழங்கி வெளிநாடு செல்ல முயன்ற யாழ்.இளைஞர் கைது!

கொழும்பு, செப். 04

பொய்யான தகவல்களை வழங்கி, மலேசிய அதிகாரிகளை ஏமாற்றி, கடவுச்சீட்டை பயன்படுத்தி ஜோர்தானுக்கு செல்ல முயன்ற இளைஞரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் கைது செய்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சியம் ஊடாக ஜோர்தானுக்கு செல்வதற்காக அவர் நேற்று அதிகாலை 03.30 மணியளவில் எயார் அரேபியா விமானமான ஜி-9501இல் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

ஏர் அரேபியா விமான சேவை அனுமதி வழங்கும் பணியை மேற்கொள்வதற்காக வந்த அவர், குடிவரவு - குடியகல்வு எல்லை ஆய்வுப் பிரிவு அதிகாரிகளிடம் சமர்ப்பித்த கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களில் சந்தேகம் ஏற்பட்டதால் கைது செய்யப்பட்டார்.

# போதையில் மோ. சைக்கிள் செலுத்திய இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், செப். 04

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர் ஒருவர் கோப்பாய் போக்குவரத்து பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபரை இன்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# எரிபொருள் நிறுவனங்கள்மீது 7 மாதங்களில் 822 முறைப்பாடுகள்!

கொழும்பு, செப். 04

குறைந்தபட்ச எரிபொருள் இருப்புகளை பராமரிக்காமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பாக கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி வரை 822 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் குறித்த சம்பவங்கள் தொடர்பில் எந்த விதமான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என இலங்கை பெற்றோலியம் சட்டபூர்வ கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் மூலம் அதன் மனிதவளப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

உரிம விதிகளை மீறி, குறைந்தபட்ச எரிபொருளை ஐம்பது வீதமாக பராமரிக்காத எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு பணிப்புரை விடுத்து நீண்ட நாட்களாகின்ற நிலையில், இதுவரை எந்த ஒரு சம்பவத்திற்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதன்படி, கடந்த 2022ஆம் ஆண்டு மேல், சப்ரகமுவ, தெற்கு, வடமேற்கு, வடமத்திய, மத்திய, ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முறையே 280 , 33, 85, 109, 28, 53, 24, 12, மற்றும் 10 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள எரிபொருள் இருப்புக்களின் அளவை அறிந்து கொள்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் “இலத்திரனியல் தரவுத் திட்டம்” இல்லை எனவும், மாதாந்தம் எரிபொருள் நிரப்பு நிலையங்களை மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்து அறிக்கை தருவதாகவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சம்பவங்கள் தொடர்பான முதற்கட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும், உரிய விசாரணையின் பின்னர், குற்றவாளியான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அதிகாரம் உள்ளதாகவும், கடந்த காலங்களில் எரிபொருள் விற்பனை அனுமதிப்பத்திரங்கள் பிடிபட்டிருந்தால், எரிபொருள் விற்பனை அனுமதிப்பத்திரத்தை முழுமையாக இடைநிறுத்த முடியும் எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# சினோபெக் இம்மாதஇறுதிக்குள் நாடளாவிய ரீதியில் செயல்படும்!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, செப். 04

கடந்த வாரம் மத்தேகொடையில் தமது முதலாவது எரிபொருள் நிலையத்தை நிறுவிய சினோபெக் எரிபொருள் நிறுவனம், இந்த மாத இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் தமது செயல்பாடுகளை ஆரம்பிக்கும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் முன்னேற்றம், வர்த்தகர்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல், வர்த்தக முத்திரை மற்றும் நாடளாவிய செயல்பாடுகளை தொடங்குதல் தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் சினோபெக் எரிபொருள் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டதாக அவர் நேற்று தனது எக்ஸ் (ருவிற்றர்) பக்கத்தில் குறிப்பிட்டார்.

மேலும், அம்பாந்தோட்டையில் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கான உறுதிப்பாட்டை சினோபெக் சுத்திகரிப்பு நிலைய அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாகவும், அடுத்த வாரம் காலக்கெடுவிற்கு முன்னர் முன்மொழிவுக்கான கோரிக்கையை சமர்ப்பிப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

# கெஹலிய மீதான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்போம்!

## ரோஹித அபேகுணவர்த்தன

கொழும்பு, செப். 04

அமைச்சரவை அமைச்சர்கள் தமது பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்ற தவறினால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். கெஹலிய ரம்புக்வெல மீதான வெறுப்பு காரணமாக அவருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணையை உறுதியாக பொதுஜன பெரமுன தோற்கடிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகவும் இக்கட்டான சூழலில் நாட்டின் சுகாதாரத் துறையை வீழ்ச்சியடைய விடாது கெஹலிய ரம்புக்வெல பாதுகாத்துள்ளார். அரசியல் நோக்கங்களுக்காக கொண்டுவரப்படும் எந்தவொரு பிரேரணையையும் தோற்கடிப்பதில் கட்சி என்ற ரீதியில் பொதுஜன பெரமுன உறுதியாக இருப்பதுடன், அனைத்து உறுப்பினர்களும் ஓரணியில் உள்ளனர்.

அரசில் இருக்கும் அமைச்சர்கள் தங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்றவில்லை என்றால், அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்போம்.

அமைச்சு பதவியை அமைச்சர்கள் தமது சொத்தாக பயன்படுத்தினால், அப்போது நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்க்கட்சி அல்ல, நாம்தான் கொண்டுவருவோம் என்ற எச்சரிக்கையையும் விடுகிறோம்” - என்றார். (ஐ)

# சீனாவின் பெரும் கப்பல் நிறுவனத்தில் பணியாற்ற இலங்கையருக்கு வாய்ப்பு

கொழும்பு, செப். 04

உலகின் மிகப்பெரிய கப்பல் நிறுவனங்களில் ஒன்றான “ஃபோர் ஷிப்பிங்“ இலங்கையில் பயிற்சி பெற்ற கப்பல் பணியாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

“ஃபோர் ஷிப்பிங்“ நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் யு யோங் ஜூன் உட்பட குழுவொன்று நேற்று அமைச்சரை அவரது பணிமனையில் சந்தித்த போதே இவ்வாறு இணக்கம் வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பயிற்சி பெற்ற இளம் கப்பல் பணியாளர்கள் பலருக்கு சீனாவில் அமைந்துள்ள தனது நிறுவனத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்க



முடியும் என யு யோங் ஜூன் தெரிவித்துள்ளார்.

எனவே, ஆட்சேர்ப்பு முறைகள் தொடர்பாக இலங்கையின் கப்பல் பணி துறையில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுடன் கலந்துரையாடப்படும்.

இலங்கையில் உள்ள பயிற்சி நிறுவனங்களில் பட்டம் பெற்ற இளைஞர்களை பணியிடத்தில் பயிற்சிக்காக வேலைக்கு அமர்த்தவும், பின்னர் நிரந்தர சேவைக்கு அமர்த்தவும் தனது நிறுவனம் தயாராக இருப்பதாக ஜூன் மேலும் கூறியுள்ளார்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழுள்ள மஹபொல மரைடைம் நிறுவனம், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகம் என்பன ஒவ்வொரு வருடமும் கடல்சார் துறைகளில் தரமான குழுக்களை பயிற்றுவிப்பதாகவும், தேவைப்பட்டால் அவர்களுக்கு சீன மொழியில் புலமை உள்ளடங்கிய பாடநெறியை வழங்க முடியும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலத்திலிருந்து சீனா இலங்கைக்கு நண்பனாக உதவியதை நினைவுகூர்ந்த அமைச்சர், இலங்கை அரசாங்கத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் இந்நாட்டு இளைஞர்களுக்கு கப்பல் மற்றும் பல்வேறு துறைகளில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு தெரிவித்தார். (ஐ)

# பாதாள உலகக் குழுவை கட்டுப்படுத்த முப்படையினரும் இணைந்து நடவடிக்கை!

கொழும்பு, செப். 04

**நாட்டில் தொடர்ந்து இடம்பெறும் பாதாள உலக மோதல்கள், கொலைகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, முப்படையினருடன் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையும் இணைந்து செயல்படவுள்ளன.**

சந்தேகநபர்கள் பற்றிய தகவல்களைத் தேடுவதற்கு புலனாய்வு அமைப்புகளையும், அவர்களை கைது செய்வதற்காக பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சோதனை நடவடிக்கைகளுக்காக முப்படையினரை களமிறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடல் மார்க்கமாக தப்பிச் செல்பவர்களைக் கைது செய்ய கடற்படையினரும், விமானம் மூலம் தப்பிச் செல்லும் குற்றவாளிகளை கைது செய்ய இரகசியப் பொலிஸாரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், பாதாள உலக தலைவர்களில் முக்கியமானவர்கள் பலரை கைது செய்வதே இந்த நடவடிக்கையின் பிரதான நோக்கம் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விருந்தில் பங்கேற்ற இராஜாங்க அமைச்சர் மருத்துவமனையில்!



கொழும்பு, செப். 04

விருந்துபசாரத்தில் உணவருந்திய நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய திடீர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையிலேயே நேற்றுமுன்தினம் அவர் சேர்க்கப்பட்டார்.

கேகாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றுக்கு பின்னர், அங்கு நடத்தப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்துகொண்டதன் பின்னரே திடீரென சுகயீனமடைந்துள்ளார்.

உணவு ஒவ்வாமையால் திடீரென சுகயீனமடைந்து இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், விருந்துபசாரத்தில் உணவு சமைத்தவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்தனர். (ஐ)

# சுதந்திர கட்சியின் ஆண்டுவிழா; மகிந்தவுக்கு அழைப்பு இல்லை!

கொழும்பு, செப். 04

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் 72ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று சிறீ ஜயவர்தனபுர கோட்டையில் நடைபெறவுள்ளது.

அந்த கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவால் 1951ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2ஆம் திகதி சிறீ லங்கா சுதந்திர கட்சி நிறுவப்பட்டது.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் 60 வேட்பாளர்களில் 51 பேர் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிராம சேவகர் பிரிவுகள்தோறும் பெரமுனவுக்கு கிளை நிறுவப்படும்!

கொழும்பு, செப். 04

நாடளாவிய ரீதியில் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் பொதுஜன பெரமுனவின் கிளைகளை நிறுவும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமத்தில் இருந்து பிறந்த அரசியல் கட்சியான பொதுஜன பெரமுன, கிராமத்தின் அரசியலை வலுப்படுத்துவதுடன் இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் கிளை பிரிவுகளை நிறுவும் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் நாமல் ராஜபக்ச கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் மிகவும் ஜனரஞ்சகமான அரசாங்கத்தை உருவாக்குவதற்கான பணிகளை விரைவில் ஆரம்பிப்போம். தற்போதைய அரசாங்கத்தின் நன்மைகளை அனைத்து தரப்பு மக்களுக்கும் எடுத்து செல்வதற்கு தேவையான கிராமிய தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு கட்சியாக செயற்படுவோம்.

பொதுஜன பெரமுன எதிர்கால தேர்தல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும். கடந்த காலங்களில் கட்சியின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை வலுப்படுத்த பங்களித்த அனைவருக்கும் நன்றி.

பொதுஜன பெரமுன எப்போதும் மக்களின் கட்சியாகவே இருந்துள்ளது. போலி பிரசாரங்கள் மூலம் எம்மை மக்கள் மத்தியில் இருந்து பிரிக்க பார்த்தனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. நாட்டு மக்கள் அனைவரும் மீண்டும் எம்முடன் இணைந்துள்ளனர்.” என்று தெரிவித்தார். (ஐ)

# பெண்ணுடன் விடுதியில் தங்கியவர் திடீர் மரணம்!

கொழும்பு, செப். 04

அநுராதபுரத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் பெண் ஒருவருடன் தங்கியிருந்தவர் மாரடைப்பால் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலாவ பகுதியை சேர்ந்த 49 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், பெண் ஒருவருடன் விடுதிக்கு வந்து தங்கியிருந்தபோதே உயிரிழந்தார். அன்று மதியம் ஒரு மணியளவில், அவர் விடுதியில் திடீரென விழுந்துள்ள நிலையில், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பிரேத பரிசோதனை அறிக்கையின்படி, இது திடீர் மாரடைப்பு காரணமாக ஏற்பட்ட மரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# 62 ஆயிரம் டெங்கு நோயாளர்!

கொழும்பு, செப். 04

2023 ஆம் ஆண்டில் இது வரை நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 62 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இது வரை நாட்டில் 62 ஆயிரத்து 29 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

# மிருகக் காட்சி சாலையை காண வருவோர் தொகை இரட்டிப்பானது

கொழும்பு, செப். 04




தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் பார்வையாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகியுள்ளது. அண்மைக்காலமாக பார்வையாளர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது என தெஹிவளையில் உள்ள தேசிய விலங்கியல் பூங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பார்வையாளர்களின் அதிகரிப்புகுறித்து குறித்து மிருகக்காட்சிசாலையின் பிரதிப் பணிப்பாளர் தினுஷிகா மானவடுவ தெரிவிக்கையில்,

பார்வையாளர்களின் அதிகரிப்புக்கு பல்வேறு காரணிகள் உள்ளன. பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததற்கான காரணங்களில் ஒன்று, கடுமையான வெப்பத்தின் தாக்கமாகும். மிருகக்காட்சிசாலையானது அதன் அடர்த்தியான பசுமையான மற்றும் நிழல் நிறைந்த பகுதிகளுடன் குளிர்ச்சியான காணப்படுவதால் ஏராளமானோர் ஓய்வைக் கழிக்க வருகின்றனர். பார்வையாளர்களின் வருகைக்கு மற்றொரு காரணம் எங்கள் சிங்கக் குட்டி சிம்பா. இந்த குட்டி சிங்கத்தை காண பார்வையாளர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர் - என்றார். (ஐ)

# இலங்கை தொடர்பான வழக்கில் தீர்ப்பை தாமதிக்குமாறு அமெரிக்கா கோரிக்கை!

நியூயோர்க், செப். 04

இலங்கை அரசாங்கத்துக்கும் ஹமில்டன் ரிசர்வ் வங்கிக்கும் இடையிலான வழக்கில் தாம் தலையிடலாம் என்ற அடிப்படையில் தீர்ப்பை தாமதப்படுத்துமாறு அமெரிக்க அரசாங்கம் நியூயோர்க்கில் உள்ள நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உலக பொருளாதார ஊடக நிறுவனமான பினான்சியல் ரைம்ஸ் நியூயோர்க்கில் இருந்து இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், திருப்பிச் செலுத்தாத 250 மில்லியன் டொலர் கடன் பத்திரங்களை மீட்பதற்காக ஹமில்டன் ரிசர்வ் வங்கி, இலங்கைக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்திருந்தது.

இந்த நிலையில் அமெரிக்க அரசாங்கத்தின் சாத்தியமான பங்கேற்பு பற்றி, வழக்கை விசாரிக்கும் மாவட்ட நீதிபதி டெனிஸ் கோட்டிற்கு, நியூயோர்க் தெற்கு மாவட்டத்தின் சட்டமா அதிபர் டேமியன் வில்லியம்ஸ், கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

முன்னதாக இறையாண்மை மற்றும் வணிக கடன் வழங்குநர்களுடன், இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் வரை, தீர்ப்பை ஆறு மாத காலத்திற்கு நிறுத்தி வைக்குமாறு இலங்கையும் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது.

2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கை திவாலாகிவிட்டதாக அறிவித்த நிலையில், தமக்கான 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த தவறிமைக்காக ஹமில்டன் ரிசர்வ் வங்கி வழக்கை தாக்கல் செய்தது.

இதேவேளை வழக்கின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து இலங்கையின் நிதி அமைச்சும் இதுவரை அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. (ஐ)

# வரி ஏய்ப்பு வாகன இறக்குமதி அறிக்கைக்காக அரசு காத்திருப்பு!

கொழும்பு, செப். 04

பல நூறு கோடி ரூபாய் வரி இழப்பை ஏற்படுத்திய வாகன இறக்குமதி மோசடி தொடர்பான விசாரணையில் நிதி அமைச்சின் அறிக்கைக்காக அரசாங்கம் காத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் விசாரணை அறிக்கையை நிதியமைச்சு சமர்ப்பிக்கும் என எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இறக்குமதி தடைக்கு மத்தியிலும் சட்ட விரோதமாக வாகனங்களை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் மோசடி தொடர்பிலேயே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுமார் 5 ஆயிரம் வாகனங்கள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு, அதன் மூலம் அரசாங்கத்திற்கு பல நூறு கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ஐ)



# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சாட்சியங்கள் பதிவு

## தம்பலகாமத்தில் நேற்று நடந்தது

திருகோணமலை, செப். 04

வட, கிழக்கு போரின் போது காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளின் சாட்சியம் பதிவு தம்பலகாமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதி தலைமையில் நடைபெற்ற இந்த விசாரணையில் தம்பலகாமம், கிண்ணியா, திருகோணமலை பட்டினமும் சூழலும், மொறவெவ ஆகிய பிரதேச செயலக பகுதிகளை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் காணாமல் போனோருக்கான பணிமனை ஆணைக்குழு முன்னிலையில் வாக்கு மூலம் அளித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தங்களின் வாக்கு மூலங்களை அளித்தனர்.

இதில், காணாமல் போனோருக்கான பணிமனையின் ஆணையாளர் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# இலுப்பைக்குளத்தில் விகாரை; எதிர்த்து மக்கள் போராட்டம்!

திருகோணமலை, செப். 04

திருகோணமலை - இலுப்பைக்குளத்தில் பொரலுகந்த ரஜமகா விகாரை அமைக்கப் படவுள்ளதை எதிர்த்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மனித சங்கிலி போராட்டம் சாம்பல் தீவு பாலத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள், "பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை எதற்கு?", "பெரிய குளம் விகாரை கட்டுமானத்தை உடனடியாக நிறுத்து", "தொல்லியல் திணைக்களம் பௌத்தத்துக்கு மட்டுமா?", "தொல்லியல் திணைக்களமே இனவாதத்தை தூண்டாதே" போன்ற வாசகங்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முன்னதாக நிலாவெளியில் நடைபெறவிருந்த இந்த போராட்டத்தை தடுக்கும் வகையில் எம். பிக்களான செ. கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் உட்பட 14 பேருக்கு எதிராக நிலாவெளி பொலிஸார் தடை உத்தரவு பெற்றிருந்தனர். இதையடுத்தே போராட்டம் சாம்பல் தீவுக்கு மாற்றப்பட்டது.



இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருடன் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேசமயம், இலுப்பைக் குளத்தில் 540 குடும்பங்களை சேர்ந்த 2ஆயிரத்து 202 தமிழர்கள் வசிக்கின்றனர். இதனை சூழவுள்ள பெரியகுளம், ஆத்திமோட்டை, சாம்பல் தீவு மற்றும் சல்லி போன்ற கிராமங்களில் தமிழர்கள் மட்டுமே காலம்காலமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இங்கு விகாரை அமைப்பதற்கு கிழக்கு ஆளுநர் தடை விதித்திருந்தார். இதையடுத்து, பிக்குகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், கடந்த ஓகஸ்ட் 28ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்குள்ளும் புகுந்து பிக்குகள் குழப்பம் ஏற்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

# 157ஆவது பொலிஸ் தினம் கிண்ணியாவில் விசேட துஆப்!



கிண்ணியா, செப். 04

157ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு கிண்ணியா பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட துஆப் பிரார்த்தனை நேற்று கிண்ணியா நத்வதுல் புகாரி அரபுக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நத்வதுல் புஹாரி அரபு கல்லூரியின் அதிபர் மௌலவி எஸ். முனீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன பிரகமன்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பெர்ணாண்டோ மற்றும் கிண்ணியா உலமா சபை, பொலிஸ் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், அறபிக் கல்லூரி மாணவர்கள் உலமாக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஐந்து குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# மரத்துடன் ஓட்டோ மோதியதில் சாரதி சம்பவ இடத்திலேயே பலி!

திருகோணமலை, செப். 04

முச்சக்கர வண்டி சாரதி நித்திரைக் கலக்கத்தில் வீதியோரத்தில் இருந்த மரத்துடன் மோதியதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

திருகோணமலை - வெருகல் - பூநகர் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வெருகல் முருகன் ஆலயத்துக்கு சவாரி சென்ற முச்சக்கரவண்டி சாரதி, மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது, முச்சக்கரவண்டி வீதியோரத்தில் இருந்த மரத்துடன் மோதியுள்ளது. நித்திரைக் கலக்கம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாகக் கருதப்படுகின்றது. விபத்தில் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரழந்தார்.

உயிரிழந்த நபர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியாகராசா ஜெயச்சந்திரன் (வயது 41) என்பவர் ஆவார்.

ஈச்சிலம்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 26 மருத்துவர்கள் வெளியேறினர்!

கல்முனை, செப். 04

அம்பாறை, கல்முனை பிராந்தியத்தில் பணியாற்றிய 26 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கல்முனை பிராந்திய கிளை தெரிவித்துள்ளது.

அந்த சங்கம் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாட்டில் மீண்டும் கலவர சூழலை ஏற்படுத்த தென்னிலங்கை முயற்சி!

## கலையரசன் எம். பி. குற்றச்சாட்டு

பெரியநீலாவணை, செப். 04

தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகளும் மதத்தலைவர்களும் மீண்டுமொரு கலவர சூழலை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்று செயல்படுகின்றார்கள். இது விடயத்தில் நாங்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்துள்ளார்.

பெரிய நீலாவணையில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வு ஒன்றில் விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தற்போது வளர்ந்து வருகின்ற இளம் சமுதாயம் கல்வியுடன் சேர்த்து விளையாட்டையும் ஊக்கப்படுத்த வேண்டும். எமது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஒரு கிராமத்தில் விளையாட்டுத் துறையில் 80 வீதமானவர்களை உருவாக்கிய பெருமையும் உள்ளது.

எமது இளைஞர்கள் அயராத முயற்சியும் தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக இருந்தால் தான் எதிர்காலத்திலே இந்த சமூகத்தில் வாழ முடியும். குறிப்பாக, இந்த நாட்டிலே தற்போதிருக்கின்ற பெருளாதார நிலையில் - அதிகமான இளைஞர்கள் வெளிநாடு செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. மிகவும் மோசமான சூழலை நாடு சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இந்த சூழல் இன்னும் நீடிக்குமானால் இதைவிட மோசமான வறுமை மக்கள் மத்தியில் ஏற்படும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

நாடு போரால் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலையை சந்தித்தது. இந்நிலையில், அது போன்றதொரு கலவர சூழலை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்று தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகளும் மதத்தலைவர்களும் செயல்படுகின்றார்கள். இதிலும் நாங்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

இளைஞர்கள் இவ்வாறான விடயங்களையெல்லாம் கருத்தில் கொள்ளாது அவர்களின் வலைக்குள் சிக்குண்டுவிடாது. எமது பிரதேசத்தில் எமது உரிமைகள், கல்வி உட்பட பொருளாதார ரீதியான வளர்ச்சியிலே முன்னின்று உழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# விபத்தில் காயமடைந்த குடும்ப பெண் மரணம்!

களுவாஞ்சிக்குடி, செப். 04

மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலை சிக்கியதால் விழுந்து படுகாயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

களுவாஞ்சிக்குடி - போரதீவு பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் கோவில் போரதீவு - கிருஷ்ணன் வீதியை சேர்ந்த அழகுதுரை தங்கமலர் (வயது 51) என்பவரே உயிரிழந்தார்.

இவர், கடந்த மாதம் 28ஆம் திகதி தனது மகனுடன் உறவினரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். அவரின் சேலை மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் அகப்பட்டதில் அவர் விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

ஈழநாடு






## 8 இலட்சம் ஆப்கான் நாட்டவர்கள் அமெரிக்காவில் குடியேற காத்திருப்பு

வாஷிங்டன், செப். 04

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அமெரிக்காவில் குடியேறுவதற்காக 8 இலட்சம் காத்திருக்கின்றனர் என்று வெளியுறவு அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றினர். இதனால் அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறின. அதுமுதல் அங்கு பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக பெண்கள் மீது ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இதற்கிடையே போர் முயற்சிகளுக்கு உதவிய மக்கள் அமெரிக்காவில் குடியேறும் வகையில் சிறப்பு வீசா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டில் இந்த திட்டம் கொண்டு வரப்பட்டாலும் தலிபான்கள் ஆட்சிக்கு பிறகு இதற்கு ஏராளமானோர் விண்ணப்பித்து வருகின்றனர். அதன்படி சுமார் 8 இலட்சத்து 40 ஆயிரம் பேர் அந்த சிறப்பு வீசாவை பெறக் காத்திருக்கின்றனர் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(ஐ)

## பொலிஸாருடனான மோதலில் 18 கொள்ளையர்கள் உயிரிழப்பு



கேப்டவுன், செப். 04

தென்னாபிரிக்காவில் கொள்ளையர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் 18 கொள்ளையர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

லிம்போபோ மாகாணத்தில் வங்கிகளுக்கு பணம் எடுத்துச் செல்லும் வாகனத்தை மறித்து பணத்தைக் கொள்ளையடிக்க ஒரு கும்பல் திட்டமிட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து சென்று தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, பொலிஸார் மீது கொள்ளை கும்பலைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து, பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தினர். இந்த துப்பாக்கிச் சூட்டில் கொள்ளை கும்பலைச் சேர்ந்த 16 ஆண்கள், 2 பெண்கள் உட்பட மொத்தம் 18 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## நோபல் பரிசு வழங்கும் விழா; ரஷ்யாவுக்கு அழைப்பு இல்லை!

ஸ்டாக்ஹோம், செப். 04

நோபல் பரிசு வழங்கும் விழாவில் பங்கேற்க ரஷ்யா, பெலாரஸ், ஈரான் ஆகிய நாடுகளுக்கு விடுத்த அழைப்பை நோபல் அறக்கட்டளை திரும்ப பெற்றுள்ளது.

சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் இந்த ஆண்டுக்கான நோபல்பரிசு வழங்கும் விழாவில் பங்கேற்க ரஷ்யா, பெலாரஸ், ஈரான் ஆகிய நாடுகளுக்கும் அறக்கட்டளை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு சுவீடனை சேர்ந்த பல எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்து நோபல் பரிசு வழங்கும் விழாவை புறக்கணிப்பதாக தெரிவித்தனர்.

உக்ரைன் மீதான போர் மற்றும் சுவீடன் நேட்டோ அமைப்பில் இணைய ரஷ்யா எதிர்ப்பது ஆகியவற்றுக்காகவே இந்த எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

கடும் எதிர்ப்பால் நோபல் பரிசு வழங்கும் விழாவில் பங்கேற்க ரஷ்யா, பெலாரஸ், ஈரான் ஆகிய நாடுகளுக்கு விடுத்த அழைப்பை நோபல் அறக்கட்டளை திரும்ப பெற்றுள்ளது.

# சர்மாட் அணு ஏவுகணையை படையில் சேர்த்தது ரஷ்யா!



மொஸ்கோ, செப். 04

ரஷ்யாவின் 'அதிபயங்கர' ஏவுகணை எனக் கருதப்படும் சர்மாட் ரக ஏவுகணைகள் இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளன என்று அந்த நாடு அறிவித்துள்ளது.

"ரஷ்யாவுடன் மோத நினைக்கும் எந்தவொரு நாட்டையும் ஒரு முறைக்கு இரு முறை சிந்திக்க வைக்கும் என்று ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடினால் வர்ணிக்கப்பட்ட இந்த ஏவுகணை கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் திறன் கொண்டது.

இது குறித்து ரஷ்யா விண்வெளி ஆய்வு மையமான ராஸ்காஸ்மாஸின் தலைவர் யூரி போரிசொவ் கூறுகையில், "கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன சர்மாட் ஏவுகணைகள் இராணுவ சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. அவை, பயன்படுத்துவதற்கு தயார் நிலையில் நிறுவப்பட்டுள்ளன", என்றார்.

ரஷ்யா உக்ரைன் மீதான படையெடுப்பை தொடங்கியபோது, மேற்கத்தேய நாடுகள் தலையிட்டால் மிகக் கடுமையான விளைவுகளை அவை சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார். போர் தொடங்கி இரு மாதங்களின் பின்னர் அவர் வெளியிட்ட அறிக்கையில், அந்நிய அச்சுறுத்தல்களில் இருந்து ரஷ்யாவை சர்மாட் ஏவுகணைகள் பாதுகாக்கும். எதிரிகள் எங்கள் மீது தாக்குதல் நடத்த முடிவு செய்தால் அவர்களை ஒரு முறைக்கு இரு முறை அந்த ஏவுகணைகள் சிந்திக்க வைக்கும்", என்று கூறியிருந்தார்.

இந்த சூழலில், சர்மாட் ஏவுகணைகள் ரஷ்யா இராணுவப் பணியில் இணைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

### சர்மாட் ஏவுகணை

சர்மாட் ஏவுகணைகள் 15 அணுகுண்டுகளை சுமக்க வல்லது என்று கூறப்படுகின்றது. எனினும், இதனை 10 போர் கப்பல்களின் திறன்வாய்ந்தது என்று அமெரிக்கா மதிப்பிடுகிறது. 200 தொன் எடையுடன் 18 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் சென்று இலக்குகளை தாக்கவல்லது இந்த ஏவுகணை.

மறைவிலிருந்து ஏவுவதற்கு முடியுமான இந்த பொலிஸ்ரிக் வகை ஏவுகணை ஒரே நேரத்தில் பல்வேறு இலக்குகளைத் தாக்கி அழிக்கக்கூடியவகையில் பல குண்டுகளை தாங்கி செல்ல வல்லது. இந்த ஏவுகணையை செலுத்தும்போது அதனை உந்திச் செல்லும் ஏவுகணையின் எந்திரம் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு இயங்கிய பின்னர் இலக்கை நோக்கிப் பறக்கத் தொடங்கும். இது ஏவுகணையின் 'உந்துதல் கட்டம்' என்கிறார்கள். இந்த நேரத்தில்தான் கண்காணிப்பு கருவிகள் ஏவுகணை தாக்குதலை முன்கூட்டியே கண்டறிய முடியும். எனவே, இதனை இடைமறித்து தாக்குவது அசாத்தியம்.

## ரஷ்ய விண்கலம் விழுந்ததால் நிலவில் 10மீற்றர் அகல பள்ளம்!

நியூயோர்க், செப். 04


சந்திரத் தரையில் ரஷ்யாவின் லூனா 25 விண்கலம் விழுந்ததால் 10 மீற்றர் அகலமான பள்ளம் ஏற்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவ பகுதியை ஆராய இந்தியாவுக்கு போட்டியாக ரஷ்யா லூனா-25 விண்கலத்தை அனுப்பியது.

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் தரையிங்கி தரையிறங்க முன்பாக லூனா-25 விண்கலத்தை தரையிறக்க ரஷ்ய விண்வெளி நிறுவனம் முயன்றது. ஆனால், கட்டுப்பாட்டை இழந்து அந்த விண்கலம் சந்திரத் தரையில் விழுந்து நொறுங்கியது.

லூனா-25 விண்கலம் விழுந்த இடத்தை நிலவை கண்காணித்து வரும் அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் ஆர்பிட்டர் படம் பிடித்துள்ளது. லூனா-25 விண்கலம் தரையிறங்க வேண்டிய இடத்துக்கு அருகில் புதிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால், இது லூனா-25 விண்கலம் விழுந்த இடமாக இருக்க வாய்ப்புள்ளது என்று கூறப்படுகின்றது. இந்த புதிய பள்ளம், 10 மீற்றர் அகலத்தில் உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

(ஐ)





## இந்தியா செல்கிறார் அமெரிக்க ஜனாதிபதி!

வாஷிங்டன், செப். 04

இந்திய தலைநகர் புதுடில்லியில் எதிர்வரும் 9, 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஜி-20 மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடின், சீன ஜனாதிபதி ஜின்பிங் ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்ற நாட்டு தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்த நிலையில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வருகிற 7ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்கிறார் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. ஜி-20 மாநாட்டுக்கு முன்பாக 8ஆம் திகதி ஜோ பைடன் இந்திய பிரதமர் மோடியுடன் இருதரப்பு பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 19 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை!

கொழும்பு, செப். 04

**நாட்டின் சில பகுதிகளில் நேற்றுமுன்தினம் முதல் பெய்துவரும் கடும் மழையால் நான்கு மாவட்டங்களில் உள்ள 19 பிரதேச செயலக பிரிவுகளுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, காலி மாவட்டத்தில் பத்தேகஹா, எல்பிட்டி, நாகொடை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு முதல் நிலை மண்சரிவு அபாய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. வள்ளலாவிட்ட, பாலிந்த நுவர, மத்துகம பிரதேச செயலர் பகுதிளுக்கும் களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள, இங்கிரிய பிரதேச செயலர் பிரிவுகளில் இரண்டாம் நிலை எச்சரிக்கை அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்தில், ருவன்வெல்ல, புலத்கொஹூபிட்டிய, யட்டியந்தோட்டை, தெரணியகலை, தெஹியோவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு முதல் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில், கலவன கிரியெல்ல, அயகம பிரிவுகளுக்கு முதல் நிலை எச்சரிக்கை அறிவிப்பும், அஹலியகொட, குருவிட்டை, இரத்தினபுரி பகுதிகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச செயலகங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியது. தொடர்ந்தும் மழை பெய்தால் மண்சரிவு அபாயம் குறித்து அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

# இலங்கை மின்சார சபையில் 134 பேருக்கு நிரந்தர நியமனம்!

## மின்சக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 04

மின்சார சபையின் நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்ட 134 பேரை நிரந்தர பதவிகளில் நியமிக்கப்படவுள்ளனர். மீதமுள்ளவர்கள் 6 வார வேலைத் திட்டத்தில் நியமிக்கப்படுவார்கள் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார். மேலும் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை மின்சார சபைக்கு நிரந்தர ஊழியர்களை நியமிப்பது தொடர்பிலும் கடந்த 7 வருடங்களாக தேசிய தொழில் தகுதி (என். வி. கியூ.) தர சான்றிதழ் மற்றும் பயிற்சியை முடித்த தொகுதிகளின் பிரதிநிதிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், மின்சார சபையின் செயல்முறை, நிரந்தர பதவிகளுக்கு உள்வாங்குதல், செயல்திறன் அடிப்படையிலான சம்பளம், பதவி உயர்வு தொடர்பாகவும் போனஸ் முறைகள் மற்றும் கலந்துரையாடப்பட்டவிடயங்களுக்கான காலக்கெடு தொடர்பாகவும் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# யானைகளின் தொல்லை காரைதீவில் அதிகரிப்பு!

காரைதீவு, செப். 04

காரைதீவுப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை தினமும் அதிகரித்து வருகின்றது.

அறுவடையை அடுத்து வெள்ளிக்கிழமை இரவு காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்தில் சுமார் 50 யானைகள் நுழைந்தன. இவற்றில் சில மக்கள் குடியிருப்பு பகுதிக்குள்ளும் நுழைந்தன.



இவ்வாறு நுழைந்த யானைகள் மதில்களை உடைத்ததுடன், பயிர் செய்கைகளையும் அழித்துச் சென்றுள்ளன. (ஐ)

# அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு சலுகை அடிப்படையில் கடன் திட்டம்!

கொழும்பு, செப். 04

பெரும்போகத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு சலுகை வட்டியின் கீழ் கடன் வழங்கும் திட்டத்தை நிதி அமைச்சு அறிமுகம் செய்யவுள்ளது.

இதன்படி, தினசரி 25 மெற்றிக் தொன் அல்லது அதற்கும் குறைவான அரைக்கும் திறன் கொண்ட செல்லுபடியாகும் வணிகப் பதிவு வைத்திருக்கும் ஆலை உரிமையாளர்கள் இந்தக் கடனை பெறமுடியும்.

ஓர் ஆலை உரிமையாளருக்கு அதிகபட்சமாக 5 கோடி ரூபாய்க்கு உள்ளாக 16 வீத வருட வட்டியில் வழங்கப்படும். இதில் 12 வீத வட்டியை அரிசி ஆலை உரிமையாளர்களும், மீதமுள்ள 4 வீத வட்டி மானியமும் செலுத்தவேண்டும்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதியன்று அமைச்சர்கள் குழு எடுத்த முடிவின் படி, இந்த சலுகைக் கடன் திட்டம் வழங்கப்படுகிறது. இந்தக் கடனை எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதி வரை பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

நுவரெலியா, செப். 04

தோட்டத்துக்கு வழங்கிய மின் இணைப்பு வடத்தை தூக்கிய பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நுவரெலியா - சாந்திபுர பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், 3 பிள்ளைகளின் தாயான 45 வயதுடைய மைக்கல் எக்லஸ் என்பவரே உயரிழந்தார்.

தோட்டத்துக்கு தண்ணீர் இறைப்பதற்காக மோட்டர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு வடத்தை நிலத்திலிருந்து தூக்கியபோதே அவரை மின்சாரம் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மண்மேடு சரிந்ததில் ஒருவர் உயிரிழந்தார்

நுவரெலியா, செப். 04

மதில் கட்டுவதற்காக அத்திபார கிடங்கு வெட்டியபோது மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருநர் உயிரிழந்தார் என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி - நாவலப்பிட்டி - ஷொருகசின்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த விமல் ஜயசிறி (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கூலித் தொழிலாளி என்று தெரிய வருகின்றது. இவர், மதில் கட்டுவதற்காக அத்திபார கிடங்கு வெட்டியபோது மண்மேடு சரிந்ததில் அதற்குள் சிக்குண்டுள்ளார். அவரை மீட்ட பிரதேச வாசிகள் உடனடியாக நாவலப்பிட்டி பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மீனவர்களுக்கு அபாய எச்சரிக்கை!

கொழும்பு, செப். 04

மீனவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கையை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ளது.

தென்மேற்கு பருவபெயர்ச்சி மழை காரணமாக கடல் பிராந்தியங்களில் காற்று அதிகரித்த வேகத்தில் வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களிலும், புத்தளம் முதல் மன்னார் ஊடாக திருகோணமலை வரையான கடற்பிராந்தியங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இந்த கடல் பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் செயல்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# மரக்கறிகள், பழங்கள் அறுவடைக்கு பின்னரான விரயம் 50வீதம் குறைப்பு!

கொழும்பு, செப். 04

அறுவடைக்கு பின் ஏற்படும் பழங்கள், மரக்கறிகளின் விரயத்தை இந்த ஆண்டில் 50 வீதத்தால் குறைக்க முடிந்துள்ளதாக அறுவடையின் பின்னான தொழில்நுட்பம் பற்றிய நிறுவகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தை, அடுத்த இரண்டு மாதங்களில் செலவிடுவது தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் அண்மையில், விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, அறுவடைக்குப் பின்னரான விரயத்தைக் குறைப்பதற்கான முன்னேற்ற அறிக்கை அறுவடையின் பின் தொழில்நுட்பம் பற்றிய நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த 2018ஆம் ஆண்டில், நாட்டில் மரக்கறிகள், பழங்கள் போக்குவரத்து மற்றும் பாவனையில் 40 வீதத்துக்கும் அதிகமானவை அறுவடைக்குப் பின்னர் விரயமடைந்தன.

எனினும், இந்த ஆண்டுக்குள் சில மரக்கறிகள், பழங்களின் விரயத்தை 50 வீதத்தால் குறைக்க முடிந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், மரக்கறிகள், பழங்களை அறுவடை செய்வதில் தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துவதோடு, விவசாயிகள் போக்குவரத்தில் பாதுகாப்பான பொதி முறையை பயன்படுத்துவதை ஊக்குவித்ததாகும்.

இதற்காக இந்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் 45 மில்லியன் ரூபாயை அரசாங்கம் வழங்கியுள்ளது.

நாட்டில் 2 இலட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் மரக்கறிகள், பழங்கள் அறுவடைக்கு பின் வீணாகின்றன. இவற்றின் பெறுமதி சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாயாகும்.

அறுவடைக்கு பின்னரான விரயத்தை மேலும் குறைக்கும் வகையில், மரக்கறிகள் மற்றும் பழங்களை கொண்டு செல்வதற்காக விவசாயிகளுக்கு கூடைகளை வழங்கும் ஏற்பாட்டை விரிவுபடுத்து மாறு அமைச்சர் மகிந்த அமரவீர அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும், இது தொடர்பில் திறைசேரியுடன் கலந்துரையாடி எதிர்வரும் வருடத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13ஐ...

பற்றிய கலந்துரையாடல்களைச் செய்யவுள்ளனர். இந்தக் கலந்துரையாடல் இந்த மாதத்தின் முதல்வாரத்தில் ஆரம்பமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சனல் 4...

காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையின் ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் (Sri Lanka's Easter Bombings) என்ற பெயரில் இந்த ஆவணப்படம் வெளியாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு அரசாங்க அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தும் அரசாங்கத்தின் தகவல்களை அம்பலப்படுத்துவோரால் முன்வைக்கப்பட்ட புதிய தகவல்களின் வெளிச்சமாக இந்த நிகழ்ச்சி அமையவுள்ளது என்றும் அந்த சனல் 4 தெரிவித்துள்ளது. (ஐ)

## "பொது வேட்பாளராக களமிறங்கத் தயார்!"

கொழும்பு, செப். 04

அரசியலில் நான் எதற்கும் தயாராகவே இருக்கின்றேன். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராகவும் நான் தயார் என சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் நாம் அனைவரும் சகோதரர்கள்போல் செயற்பட்டு வருகின்றோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் பொதுவேட்பாளராகக் களமிறங்குவதற்கான சாத்தியம் உள்ளது. அதற்கான அழைப்பு விடுக்கப்பட்டால் நிச்சயம் ஏற்பேன். - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சஜித் போட்டியிடமாட்டார் என்ற போலிச் செய்தியை கட்டமைத்து வருகின்றது. நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது கோட்டபாபயவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு என்னைத் தோற்கடிக்க முயற்சித்தவர்களே இவ்வாறு கூறிவருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன் என்பதே இவர்களுக்கு நான் கூறக்கூடிய பதில். நான் மரணத்துக்குப் பயப்படும் கோழை அல்ல. எந்த ஒரு சவாலையும் சந்திக்க தயாராக இருக்கிறுன். ராஜபக்ஷவுடன் ஒருபோதும் ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை நான் மேற்கொள்ளவில்லை - என்றார்.

அத்துடன், இன்று நாட்டில் உணவுப் பாதுகாப்பை விடுத்து உணவுப் பாதுகாப்பின்மையே ஏற்பட்டுள்ளது. நாட்டின் நீர்ப்பாசன முறைமைகளை முற்றாக புனரமைப்பதே தனது முதல் படி.

பாராளுமன்ற சட்டமூலங்கள் தனி நபர் பிரேரணை முன்மொழிவாக கொண்டு வரப்படுகின்றன. என்றாலும் அதை நிறைவேற்ற ஆளும் கட்சியின் ஆதரவு தேவை. எந்நிலையிலும் நெல்லுக்கு உத்தரவாத விலை தரும் விலைச் சூத்திரத்தை வழங்கத் தயாராக இல்லாத இந்த அரசை விவசாய விரோத அரசு என்றே அழைக்கலாம்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அரச தலைவர்கள் விவசாயிகளை அவமானப்படுத்தி விமான நிலையங்களில் கூட அரிசியை களஞ்சியப்படுத்தி வைத்தனர். சஜித் பிரேமதாஸ ஆகிய எனது வாக்குகளை குறைப்பதற்காகவே இவ்வாறான சதியை மேற்கொண்டனர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## இலங்கை முழுவதும் சிவபூமியே...

இந்நிலையில் 25 மாவட்டங்களிலும் சிங்களவர்களுக்காக பௌத்த விகாரைகள் இருப்பதில் என்ன பிரச்னை? வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கக்கூடாது என்று எந்தச் சட்டத்தில் உள்ளது என்று பௌத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும்விதமாக மறவன்புலவு சச்சிதானந்தன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தெற்கிலங்கையில் சைவ கோயில்கள் இருக்கின்றன. எனவே, வடக்கு - கிழக்கு இலங்கையில் புத்த விகாரைகளை அமைத்தால் என்ன? அறிவை அடகு வைத்த பின்பு வினவுகிறார் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க.

புத்தர் இலங்கைக்கு வந்த நாளில் முருகனுக்குத் தைப்பூச விழா. இலங்கை மக்கள் அனைவரும் கூடி எடுத்த விழா - மாணிக்க கங்கையில் விழா. இலங்கையின் ஆதிக்குடிகள் சைவர்களே புத்தரை வரவேற்றார்கள். தைப்பூச நாளில் வரவேற்றார்கள்.

கதிர்காமத்தில் இருந்து காங்கேசன் துறை வரை நீண்ட, சிலாபத்தில் இருந்து மட்டக்களப்பு வரை அகன்ற, 66 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்புள்ள இலங்கைத் தீவு முழுவதிலும் பல்லாயிரம் சைவக் கோயில்களே இருந்தன. இலங்கை சிவபூமி. புத்தர் வரும்போது இருந்தன சைவக் கோயில்கள். படிப்படியாக பௌத்தர்கள் விகாரைகளை கட்டத் தொடங்கினீர்கள்.

அப்பொழுது இருந்த கோயில்களே இன்று வரை தொடர்கின்றன. புதிதாக யாரும் தென்னிலங்கையில் சைவக் கோயில்களை கட்டவில்லை. பழைய சைவக் கோயில்களையே திருப்பணி செய்து புதுப்பிக்கின்றார்கள்.

மதவாச்சிக்கு வடக்கே ஈரற்பெரிய குளத்தில் பிள்ளையாருக்கு அருமையான கருங்கல் கோயிலை இக்காலத்தில் எழுப்பியவர் சைவத்தமிழர் அல்ல. பௌத்தராகிய சிங்களவர். நீங்கள் போய் பாருங்கள். "மூஷிக வாகன..." எனத் தொடங்கும் கணபதி தெய்யோ மந்திரத்தைத் தன் பிள்ளைக்கு சொல்லிக் கொடுக்காத புத்த சிங்கள தாய் ஒருவர் இருந்தால் எனக்குச் சொல்லுங்கள்.

புத்தர் வரும் முன்பும் வந்த பின்பும் பல நூற்றாண்டுகளுக்கு இலங்கையில் விகாரைகள் இல்லவே இல்லை. ஏதோ போகட்டும் என்று சைவர் ஆகிய நாங்கள் விகாரைகளைக் கட்ட உரிமம் தந்தோம். விஜயன் வந்த பின்பும் அநுராதபுரம் சைவ சமய பிரதேசம். ஆண்ட அரசர்களின் பெயர்கள்: சிவன், மூத்த சிவன், மகாநாகன். முற்று முழுதாகச் சைவத் தமிழ்ப் பெயர்கள். சைவர்களின் தயவில் கட்டியவையே இப்பொழுது தென்னிலங்கையின் புத்த விகாரைகள்.

புத்த விகாரைகளைக் கட்டினாலும் அங்கே சிவலிங்கம் வேண்டும், திருமால் வேண்டும் இலட்சுமி, சரஸ்வதி, துர்க்கை, காளி வழிபட வேண்டும் வைரவர் வழிபட வேண்டும். தமிழ் பெண்ணாகிய பத்தி னியை வழிபட வேண்டும். எனவே, நீங்கள் விகாரைக்குள்ளே சைவக் கோயில்களை கட்டி வைத்திருக்கிறீர்கள்.

ஏனென்றால் உங்களுக்குத் தெரியும் இலங்கை சிவ பூமி. இச் சிவ பூமியில் சைவக் கோயில் இல்லாத இடம் இருக்கவிடக்கூடாது எனப் பௌத்தராகிய நீங்களே நினைக்கிறீர்கள் சைவத்தமிழ் பெண்ணான பத்தினியைப் புத்த விகாரைகளுள் அமைத்தவன் முதலாம் கஜபாகு.

இலங்கையில் நீங்கள் கணபதி தெய்யோ என்று நாளும் மனதாலும் உடலாலும் நெக்குருகி வழிபடுகின்ற போற்றுகின்ற பிள்ளையார் வழிபாட்டை பௌத்தரிடையே பரவலாக்கியவன் நரசிம்ம பல்லவனின் யானை படைத் தளபதி மாறவர்மன். வாதாபி சென்று வெற்றியோடும் பிள்ளையார் சிலைகளோடும் இலங்கை வந்தவன்.

அதே நரசிம்மம் பல்லவன் தெற்கே தேவேந்திர முனையில் தென்னாவரம் சிவன் கோயிலை பல்லவ பாணியில் கட்டுவித்தான் என்பதை நான் சொல்லவில்லை. மேலைநாட்டு வணிகப் பயணி காஸமாஸ் இன்டிகோப்ளூஸ்ரஸ் (Cosmas Indicopleustuas) சொல்கிறார்.

அறிவை அடகு வைத்து விளாசுகின்ற உங்களுக்கு இந்தச் செய்தி தெரிய வாய்ப்பில்லை.

முதலாம் பராக்கிரமபாகு, மகன் விக்கிரமபாகு, மகன் இரண்டாம் கயபாகு யாவரும் சைவத்தைப் பேணிய அரசர். சைவத்தமிழ் பாண்டிய சந்திரகுல வம்சத்தினர் எனக் குல வம்சமே பூசா வழியே கூறுவதைப் படித்தது உங்களுக்கு நினைவில்லையா?

கந்தளாயில் சதுர் வேதி மங்கலத்தில் அடைக்கலமாகிய இரண்டாம் கஜபாகுவை நீங்கள் மறந்துவிட முடியுமா?

அதற்குப் பின், இரண்டாம் நான்காம் ஆறாம் பராக்கிரமபாகு காலங்களில் இலங்கையின் தென்முனையில் தென்னாவர நாயனார் கோயிலையும் அங்கு சதுர்வேதி மங்கலங்களையும் அம்மன்னர்கள் ஆதரித்ததை செப்பேடுகளாக கல்வெட்டுகளாகக் காணலாமே. நீங்கள் படிக்கவில்லையா? -

வழிபாட்டிடங்களைப் பாதுகாக்கும் மூச்சிங்கள தம்பதெனியா, கம்பளை, கோட்டை மன்னர்களின் கல்வெட்டுகளில் முதலில் புத்த விகாரை, பின் சதுர்வேதி மங்கலம், பின் சைவத் தேவாலயம் யாவையும் முறையாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என எழுதியதை நீங்கள் படிக்கவில்லையா?,

சீனப் பயணி செங்கோ வழிபட்டுத் தமிழில் போற்றிக் கல்வெட்டு எழுதிய கோயிலே தென்னவரம். அந்தக் கல்வெட்டு இன்றும் கொழும்பு அருங்காட்சியகத்தில் இருக்கிறதே நீங்கள் பார்க்கவில்லையா?

மொரொக்கோ நாட்டுப் பயணி முகமதியரான இபன் பதுதா கண்டு ஆரவாரித்த கோயிலன்றோ தென்னவரம். பயணக் குறிப்புகளைப் படிக்கவில்லையா?

இலங்கையில் தமிழ் சைவர்கள் எவராவது புத்த விகாரையை இடித்த வரலாறை நீங்கள் சொல்ல முடியுமா?

ஆனால், கோட்டை அரசன் மாயாதுன்னையின் மகன் முதலாம் இராசசிம்மன் எத்தனை புத்த விகாரைகளை இடித்தான்? தலதா மாளிகையை இடிக்க முயன்றான் - என அங்கே இன்றும் ஓவியம் இருக்கின்றமை உங்களுக்குத் தெரியாதா?

தென்னிலங்கையில் உள்ள சைவக் கோயில்கள் ஆதியான கோயில்கள். அவற்றை இப்பொழுது யாரும் கட்டவில்லை. அங்கு சைவர்கள் இருப்பதால் அந்தக் கோயில்கள் தொடர்கின்றன. வடக்கு - கிழக்கில் பௌத்தர்கள் 1948 வரை 4வீதம். அவர்களுக்கான புத்த விகாரைகள் இருந்தன.

சைவத் தமிழ்த் தாயகத்தில் அத்துமீறிய அரச குடியேற்றங்களின் பின்பு அங்கும் விகாரைகளைப் புதிதாக அமைத்தீர்களே!

பௌத்தர் கள் இல்லாத இடத்தில் புத்த விகாரை களைக் கட்ட வேண்டாம். சைவத் தமிழர்களின் மனதை நோகடிக்க வேண்டாம். இவ்வாறு வட மாகாணப் புத்த பீடத் தலைவரும் நாக விகாரைப் புத்த பிக்குவும் உங்களுக்கு எடுத்துக் கூறிய செய்தி வந்த அச்சு மை காயவில்லையே. அதற்குள் அவசரப்பட்டு உங்கள் அறியாமையை விளாசுகிறீர்களே.

தென்னிலங்கையில் சைவக் கோயில்கள் இருப்பதால் தமிழர் பகுதிகளில் புத்த விகாரைகளை கட்ட வேண்டும் என்று சொல்கின்ற உங்களுக்கும் அறிவை அடகு வைத்த பௌத்தர்களுக்கும் சொல்கிறேன் - தென் இலங்கையில் சைவக் கோயில்கள் அநாதியானவை. அவற்றை இன்றைய தமிழர் தாயகச் சைவர்கள் அமைக்கவில்லை. தவறான வரலாற்றை திணிக்காதீர்கள். போரில் வென்ற வீறாப்பில் பௌத்த மேலாதிக்கத்தைத் திணிக்காதீர்கள்.

கத்தோலிக்கரும் - கிறிஸ்தவரும் கடந்த சில நூற்றாண்டுகளில் போரில் வென்ற பின்பு சைவக் கோயில்களை உடைத்தார்கள். கிறிஸ்தவ தேவாலயங்களைக் கட்டி எழுப்பினார்கள்.

கத்தோலிக்கரும் கிறிஸ்தவரும் சைவத்தமிழ்த் தாயகத்தில் சைவர்களை அழிக்க முயன்றதுபோல், இப்போது போரில் வென்ற பௌத்தர்களாகிய நீங்களும் சைவத்தமிழ் தாயகத்தில் சைவர்களை அழிக்க முயல்கிறீர்கள். சைவர்களை அடக்க - ஒடுக்க - அழிக்க நினைக்காதீர்கள் - வெற்றி பெற மாட்டீர்கள்.

(ஐ)

## கடலுக்கு...

அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், நாட்டில் நிலவும் கடும் மழையுடனான காலநிலை புதன்கிழமை வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, களுத்துறை, காலி, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மண்சரிவு அனர்த்தம் இடம்பெறும் சாத்தியம் உள்ள பகுதிகளில் இருப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளது.

**கொழும்பில் அதிக மழை**

நாட்டில் நிலவிய கடும் வறட்சியை தொடர்ந்து நேற்று 3 மணி நேரத்தில்

கொழும்பு மாவட்டத்தில் 77 மில்லிலீற்றருக்கும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவானது. இதனால், வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கின.

இதனிடையே, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் காலி மாத்தறை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும். நாளை மறுதினம் புதன்கிழமை வரை மழையுடனான காலநிலை தொடரும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## சண்டிலிப்பாய்...

மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். அந்தச் சமயம் அவரின் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு இழுபட்டு சென்று மின்கம்பத்துடன் மோதுண்டார். இதில் இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றையவர் காயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வாறு காயமடைந்தவர் தாவடியை சேர்ந்த பிரபாகரன் என்று அறிய வருகிறது. (ஐ)

## 4மணி...

அதிரித்து வருகின்றது. இந்நிலை யில், பேராதனை பல்கலைக்கழகம் இந்த விடயத்தை ஆய்வுக்கு உட்படுத்தியது.

ஆய்வின்படி, நாட்டில் தவறான முடிவு எடுத்து உயிரிழப்போரின் எண்ணிக்கை வருடாந்தம் 10 வீதத்தால் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. வருடம் ஒன்றுக்கு 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரை மாய்க்கின்றனர் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

கடந்த 3 வருடங்களில் மாத்திரம் 9 ஆயிரத்து 700 தங்கள் இன்னுயிரை மாய்த்துள்ளனர். கடந்த வருடத்தில் மாத்திரம் 3, 406 பேர் தம்முயிரை மாய்த்தனர். முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இது 10சதவீத அதிகரிப்பாகும்.

தற்கொலை செய்தவர்களில் 83 வீதமானவர்கள் ஆண்கள், 17 வீதமானவர்கள் பெண்கள். 40 வீதத்தினர் கல்வி கற்றவர்கள். இவர்களில் 22 வீதத்தினர் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்கள். 35 வீதத்தினர் வேலை இல்லாதவர்கள் - என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு Eelanadu

இலங்கை பொலிஸ் 150 ஆண்டுகள்:

## யாழ். ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள்!



யாழ்ப்பாணம், செப். 04

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் தேவாலயம், யாழ். நகர ஜும்மா பள்ளி வாசலிலும் இந்த விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

இவற்றில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ் அதிபர் மஞ்சுள செனரத் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

## விடுதி அறையில் காதலியை தாக்கிய இளைஞர் கைது!

கொழும்பு, செப். 04

விடுதியின் அறையில் வைத்து காதலியை இரத்தக் காயம் ஏற்படுமளவுக்கு தாக்கிய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா - நிட்டம்புவை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த யுவதி வத்துபிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பெண்ணை விரைவில் திருமணம் செய்து கொள்ள இருப்பதாக அவர் பொலிசாரிடம் கூறியதாக தெரிகிறது.

விடுதி அறையில் இருவரும் தங்கியிருந்தபோது பெண்ணுக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் வந்தன என்றும் இது பற்றி அவரிடம் கேட்டபோது ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்தே காதலியை தான் தாக்கினார் என்று இளைஞர் நிட்டம்புவை பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். (ஐ)

## கச்சதீவு இலங்கைக்கா இந்தியாவுக்கா தெளிவாக ஆராயப்படுவது அவசியம்!

சித்தார்த்தன் எம். பி.

யாழ்ப்பாணம், செப். 04

கச்சதீவு இலங்கையிடம் இருக்கிறதா அல்லது இந்தியாவுக்கு கொடுப்பதா என்பது சம்பந்தமாக இரண்டு நாடுகளும் தெளிவாக ஆராய வேண்டும் என தமிழீழ விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று அவரின் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் "தமிழ்நாட்டு மீன்வள அமைச்சர் கச்சதீவை மீட்க வேண்டும் என கூறியுள்ளார். இது குறித்து தங்களது நிலைப்பாடு என்ன?" என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கச்சதீவு ஆரம்ப காலங்களில் இந்தியா வசமிருந்ததாகவும் பின்னர் இலங்கைக்கு கொடுக்கப்பட்டதாகவும் பல உண்மைகளும் - கதைகளும் பேசப்பட்டுக்கொண்டு கொண்டிருக்கின்றன.

இது ஒவ்வொரு தடவையும் இலங்கை இந்தியாவுக்கு கொடுப்பதும் இந்தியா இலங்கைக்கு கொடுப்பதுமாக இல்லாமல் ஒரு நிரந்தரமான சரியான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் எனது நிலைப்பாடு - என்றார். (ஐ)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி:

# ஐ. நா. கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் அகழ வேண்டும்!

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 04

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எழுப்பப்படும் சில கேள்விகளுக்கான பதில்கள் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனித புதைகுழிகளில் இருக்கக்கூடுமென சுட்டிக்காட்டியுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நாளை செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.**

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினமான கடந்த ஒகஸ்ட் 30 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வட, கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்புப்போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்தவேண்டும் என்றும், கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப்புதைகுழி அகழ்வுகளை சர்வதேச கண்காணிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் நாளை செவ்வாய்கிழமை மேற்கொள்வதென முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இப்புதைகுழி அகழ்வின்போது பின்பற்றப்படவேண்டிய நியமங்கள் மற்றும் இதனை அடிப்படையாகக்கொண்ட அடுத்தகட்ட நகர்வுகள் எவ்வாறு அமையவேண்டுமென கேள்வியெழுப்பியபோதே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

மனித புதைகுழி விவகாரங்களை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகப் பார்ப்பதாகக் குறிப்பிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன், அதனடிப்படையிலேயே கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு தொடர்பில் விசேட கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எழுப்பப்படும் சில கேள்விகளுக்கான பதில்கள் இப்புதைகுழிகளில் இருக்கக்கூடுமென சுட்டிக்காட்டிய அவர், தற்போது கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி இந்நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். அது மாத்திரமன்றி இவ்விடயத்தில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் முன்னின்று செயற்பட்டதைப் போன்று, ஏனைய மனிதப்புதைகுழி அகழ்வு விவகாரங்களிலும் உரியவாறு செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கான நிதியொதுக்கீட்டை வலியுறுத்துவதில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் முன்னின்று செயற்பட்டதாகவும், அதன்மூலம் இப்பணிகளுக்கென 57 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் காணாமல்போனோர் பற்றிய பணிமனையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜெ.தற்பரன் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை இவ்விடயம் குறித்துக் கருத்து வெளியிட்ட தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்கினேஸ்வரன், கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப்புதைகுழி விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகளை மேற்கொள்ளாது என்று குறிப்பிட்டதுடன் எனவே, இந்த விசாரணைகள் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்களின் பங்கேற்புடன் நடைபெறவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

அத்தோடு இதுபற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகளிடம் தாம் வலியுறுத்தியிருப்பதாகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் பின்னணியில் கொக்குத்தொடுவாய் அகழ்வுப்பணிகளைக் கண்காணிப்பதற்கு ஐ.நா அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

## எல்லோரையும் குற்றஞ்சாட்டி நாட்டை கட்டியெழுப்ப முடியாது!

வஜிர அபேவர்த்தன எம். பி. சொல்கிறார்

கொழும்பு, செப். 04

நாட்டை பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும் எல்லோர் மீதும் குற்றம் சுமத்தி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு தொடர்பில் கட்சி அமைப்பாளர்களுக்கு அறிவிக்கும் முகமாக கொழும்பில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசியக் கொள்கையொன்றை நாம் உருவாக்க வேண்டும், எதிர்க்கட்சிகள் பொறுப்பை புறக்கணித்த போது சரிந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க கட்டியெழுப்பினார்.

நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையாவிட்டால், அது எப்போதும் உலகின் முன் பிச்சை எடுக்கும் தேசமாக மாறியே காணப்படும்" என்றார். (ஐ)

## இலங்கை பொலிஸ் சேவை 157 ஆண்டுகள் நிறைவு!

கொழும்பு, செப். 04

இலங்கை பொலிஸ் திணைக்களம் நேற்றைய தினம் தனது 157 ஆண்டு நிறைவை கொண்டாடியது.

இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மக்கள் தொடர்புகள் மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் நோக்குடன் சமய சடங்குகள் மற்றும் சமூக நடவடிக்கைகளிலும் இலங்கை பொலிஸார் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் ஊடக பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனை தெரிவித்தார். (ஐ)

## யாழ். வாக்காளர்களின் உரிமைகளை பாதுகாக்கவே தேர்தல் பணிமனை!

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்



யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வாக்காளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே புதிய தேர்தல் பணிமனை அமைப்பு செயல்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். மாவட்ட தேர்தல் பணிமனையின் புதிய கட்டட திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், இந்தக் கட்டடமானது நான்கு மாடிக்கான திட்டமாக இருந்தாலும் பொருளாதார நெருக்கடியால் ஒரு மாடிக் கட்டடமாக மட்டுப்படுத்தப்பட்டது.

மாவட்ட செயலகத்தில் அரச அதிபரின் கீழ் தேர்தல் செயல்பாடுகள் சிறப்பாக உள்ள போது ஏன் தனியான பணிமனை வேண்டும் என்ற கேள்வி எழுந்தது. தேர்தல் காலங்களில் அதிகளவான இடம் தேவைப்படுவதால் தான் இந்தப் பணிமனைக்கான தேவை காணப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலே இந்தக் கட்டடத்தின் அமைவு அமைந்துள்ளது. மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக ஏனைய அனைத்து சிவில் அமைப்புக்களையும் இணைத்து பணிபுரியும் இடமாக இந்த இடம் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# ஹீத் ஸ்ட்ரீக் காலமானார்

ஹராரே, செப். 04

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ஹீத் ஸ்ட்ரீக் காலமானார். அவருக்கு வயது 49.

ஹீத் ஸ்ட்ரீக், சிம்பாப்வே அணிக்காக 1993 முதல் 2005 வரையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அந்த அணியின் தலைவராகவும் பயிற்றுநராகவும் பணியாற்றியிருந்தார். ஜிம்பாப்வே அணிக்காக விளையாடிய வீரர்களில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரராகவும் திகழ்ந்தார் ஹீத் ஸ்ட்ரீக்.

கடந்த மே மாதம் முதல் அவர் கல்லீரல் புற்றுநோய் பாதிப்பால் சிகிச்சை பெற்று வந்தார். கடந்த சில வாரங்களுக்கு முன்பு ஹீத் ஸ்ட்ரீக் உயிரிழந்தவிட்டார் என்று வதந்தி பரவியது. அதனை அவரே மறுத்து அறிக்கை விட்டிருந்தார். தான் நலமுடன் இருப்பதாகவும் புற்று நோயிலிருந்து மீண்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஹீத் ஸ்ட்ரீக் உயிரிழந்தார் என்று அவரின் மனைவி நாடின் ஸ்ட்ரீக் தனது சமூகவலைத்தள பதிவிட்டுள்ளார். தனது பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

"என் வாழ்க்கையின் மிகப்பெரிய அன்பும் என் அழகான குழந்தைகளின் தந்தையும் குடும்பம் மற்றும் நண்பர்களால் சூழ தனது கடைசி நாட்களை கழிக்க விரும்பிய தன்னுடைய வீட்டிலிருந்து தேவதூதர்களால் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் அன்பு மற்றும் அமைதியால் சூழப்பட்டிருந்தார்" இவ்வாறு நாடின் குறிப்பிட்டுள்ளார். ஹீத் ஸ்ட்ரீக் மறைவுக்கு கிரிக்கெட் பிரபலங்கள், ரசிகர்கள் என பலரும் சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# 850ஆவது கோல் அடித்து ரொனால்டோ சாதனை!



ரியாத், செப். 04

கிறிஸ்டியானோ ரொனால்டோ சவூதி புரோ லீக்கில் அல்-ஹஸூமுக்கு எதிராக தனது 850ஆவது கோலை அடித்து வரலாறு படைத்துள்ளார்.

சவுதி அரேபியா உதைபந்தாட்ட லீக் தொடர் ஒகஸ்ட் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் அல்-நாசர் அணிக்காக போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த பிரபல வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடி வருகிறார்.

இதில் நடந்த ஆட்டம் ஒன்றில் அல்-நாசர் மற்றும் அல்-ஹஸூம் அணிகள் மோதின. இந்த போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு கோல் அடித்தார். மேலும் ஆட்டத்தின் போது 2 சக வீரர்கள் கோல் அடிக்க உதவினார். இதன் மூலம் அல்-நாசர் அணி 5-1 என்ற கோல் கணக்கில் அல் ஹஸூம் அணியை தோற்கடித்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் அல்-நாசர் அணி புள்ளி பட்டியலில் 6ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இது ரொனால்டோவின் 850ஆவது கோலாக பதிவாகியுள்ளது. அவரின் வெற்றிகரமான உதைபந்தாட்ட வாழ்க்கையில் ஒரு முக்கிய மைல்கல்லாக இது அமைந்துள்ளது. மேலும் உதைபந்தாட்ட வரலாற்றில் இந்த மைல்கல்லை எட்டிய முதல் வீரர் ரொனால்டோதான். (ஐ)

### ஆசியக் கிண்ணத் தொடர்:

# இந்தியா பாகிஸ்தான் போட்டி மழையால் கைவிடப்பட்டது!

பல்லேகலை, செப். 04

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதிய போட்டி மழை காரணமாக இடையிலேயே கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

கண்டி -பல்லேகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக இருந்தது. மந்தமாக விளையாடிய இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா 22 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷாகீன் ஷா அப்ரிடி பந்தில் "போல்ட்" ஆனார். தொடர்ந்து விராட் கோலி 4 ஓட்டங்களில் ஷாகீன் ஷா அப்ரிடியின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். படுமந்தமாக விளையாடிய ஷூப்மன் கில் 32 பந்துகளில், ஒரு பௌண்ட்ரியுடன் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹரிஸ் ரவூப் பந்தில் போல்ட் ஆனார்.





ஸ்ரேயாஸ் ஐயர் 14 ஓட்டங்களில் ஹரிஸ் ரவூப் வீசிய பந்தை அடித்தாட முயன்று பஹர் ஷமானிடம் பிடிகொடுத்து நடையை கட்டினார். 66 ஓட்டங்ளுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் இஷான் கிஷனுடன் இணைந்த ஹார்திக் பாண்டியா அபாரமான இணைப்பாட்டத்தைக் கட்டமைத்து ஆட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். இருவரும் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தனர். இதனால் இந்திய அணியின் ஓட்ட வீதம் சீராக ஏற்றம் கண்டது.

அற்புதமாக விளையாடி வந்த இஷான் கிஷன் 81 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹரிஸ் ரவூப் வீசிய பந்தை விளாச முயன்ற போது பாபர் அஸாமிடம் பிடியானது. 5ஆவது விக்கெட்டுக்கு ஹார்திக் பாண்ட்யாவுடன் இணைந்து இஷான் கிஷன் 138 ஓட்டங்கள் சேர்த்தார். சதம் அடிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட ஹார்திக் பாண்ட்யா 90 பந்துகளில், ஒரு சிக்ஸர், 7 பௌண்ட்ண்டரிகளுடன் 87 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தனது விக்கெட்டை ஷாகீன் ஷா அப்ரிடியிடம் எளிதாக பறிகொடுத்தார்.

இதன் பின்னர் இந்திய அணி ஆட்டம் கண்டது. ரவீந்திர ஜடேஜா 14, ஷர்துல் தாகூர் 3, குல்தீப் யாதவ் 4, ஜஸ்பிரீத் பும்ரா 16 ஓட்டங்களில் நடையை கட்ட 48.5 ஓவர்களில் 266 ஓட்டங்களுக்கு இந்திய அணி ஆட்டமிழந்தது. உதிரிகள் வழியாக 20 ஓட்டங்கள் கிடைக்கப்பெற்றதும் இதில் அடங்கும். இந்திய அணியின் துடுப்பாட்டத்தின்போது இரு முறை மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தான் அணி தரப்பில் ஷாகீன் ஷா அப்ரிடி 4 விக்கெட்களையும் நசீம் ஷா, ஹரிஸ் ரவூப் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் வீழ்த்தினர். இந்திய அணியின் துடுப்பாட்டம் முடிவடைந்ததும் மீண்டும் மழை குறுக்கிட்டது. இதனால் பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடுவதில் தாமதம் ஏற்பட்டது.

இரவு 8.15 மணியளவில் தொடங்க வேண்டிய ஆட்டம் 9.50 மணி வரை தொடங்கப்படவில்லை. மழை தொடர்ந்ததால் ஆட்டம் கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

பாகிஸ்தான் அணி முதல் போட்டியில் நேபாளத்தை வீழ்த்தி இருந்ததால் 3 புள்ளிகளுடன் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியது. இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் இன்று நேபாளத்துடன் மோதுகிறது. (ஐ)



# நியூசிலாந்துடனான ரி - 20 இங்கிலாந்து முன்னிலை

மன்செஸ்டர், செப். 04

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் 103 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது நியூசிலாந்து அணி.

மன்செஸ்டர் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 198 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரரான ஜொன்னி பெயர்ஸ்ரோ 60 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 86 ஓட்டங்களும், அணித்தலைவர் ஜோஸ் பட்லர் 13 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். வில் ஜேக்ஸ் 19, டேவிட் மலன் ஓட்டம் எதையும் பெறாமல் வெளியேறினர். ஹாரி புரூக் 36 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 67 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழந்தார்.

நியூசிலாந்து அணி தரப்பில் இஷ் சோதி 2 விக்கெட்கள் கைப்பற்றினர்.

199 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணியானது 13.5 ஓவர்களில் 103 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. டிம் ஷெய்பர்ட் 39, கிளென் பிலிப்ஸ் 22, மார்க் சாப்மேன் 15 ஓட்டங்கள் சேர்த்தனர். மற்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்தைத் தாண்டவில்லை. ஃபின் ஆலன் 3, டேவன் கொன்வே 2, டேரில் மிட்செல் 0, மிட்செல் சாண்ட்னர் 8, அடம் மில்ன் 2, டிசம் சவுதி 8, லக்கி பெர்குசன் 0 என நடையை கட்டினர்.

இங்கிலாந்து அணி தரப்பில் கஸ் அட்கின்சன் 4, ஆதில் ரஷித் 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடரில் 2-0 என முன்னிலை வகிக்கிறது.

லீ செஸ்டர் ஸ்டிரீட்டில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது. (ஐ)

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போராடி வென்றார் ஜொகோவிச்!



நியூயோர்க், செப். 04

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் 3ஆவது சுற்றில் போராடி வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டத்தில் 2ஆம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் சகநாட்டைச் சேர்ந்த 38ஆம் நிலை வீரரான லாஸ்லோ ஜெரேவுடன் மோதினார்.

இதில் முதல் இரு செற்களையும் லாஸ்லோ ஜெரே 6-4, 6-4 என கைப்பற்றினார். எனினும் அடுத்த 3 செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய ஜொகோவிச் 6-1,6-1,6-3 என கைப்பற்றினார். 3 மணி நேரம் 54 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜொகோவிச் 4-6,4-6,6-1,6-1,6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# சூரியனை ஆராய விண்ணில் பாய்ந்த ஆதித்யா-எல்1!



இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் வரலாற்றில் முதல்முறையாக சூரியனை ஆய்வு செய்ய ஒரு விண்கலம் சிறிஹரிகோட்டாவில் இருந்து புறப்பட்டுள்ளது.

சனியன்று காலை 11:50 மணிக்கு பி.எஸ்.எல்.வி எக்ஸ்.எல் ராக்கெட் மூலமாக ஆதித்யா-எல்1 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

ஆதித்யா என்பதற்கு சமஸ்கிருதம் மற்றும் இந்தி மொழியில் சூரியன் என்று பொருள். எல்1 என்பது சூரியனுக்கும் பூமிக்கும் நடுவே இரண்டின் ஈர்ப்பு விசையும் சமநிலையில் இருக்கும் பகுதி.

நிலவின் தென் துருவத்திற்கு அருகே விண்கலம் ஒன்றை வெற்றிகரமாகத் தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையை ஆகஸ்ட் 23ஆம் திகதியன்று இந்தியா பெற்றது.இது நடந்த ஒரே வாரத்தில் சூரி யனை ஆய்வு செய்வதற்காகவும் ஒரு விண்கலத்தை விண்ணில் வெற்றிகரமாக ஏவியுள்ளது.

**சூரியனை ஆய்வு செய்யப் புறப்பட்ட ஆதித்யா-எல்1 எப்படி பயணிக்கும்?**

சூரியன் மட்டுமே பூமிக்கு மிக அருகில் 15 கோடி கி.மீ உள்ள நட்சத்திரம். சூரிய மண்டலத்தின் நடுவே கொப்பளித்துக் கொண்டிருக்கும் இந்த வாயுப் பந்துதான் இங்குள்ள அனைத்துக் கோள்களுக்குமான ஆற்றல் ஆதாரமாகச் செயல்படுகிறது. பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு ஏது வான சுற்றுச்சூழல் உருவாகவே சூரிய னின் இருப்புதான் ஒரு மிக முக்கியக் காரணம்.

இத்தகைய அதி முக்கியத்துவம் வாய்ந்த சூரியனில் ஆய்வு செய்வது நமது கேலக்ஸி மற்றும் பேரண்ட குறித்த பல புரிதல்களை ஏற்படுத்தும் என்று இந்தத் திட்டம் குறித்த இஸ்ரோவின் கையேடு குறிப்பிடுகிறது.

ஆதித்யா-எல்1 இன்று முதல் சுமார் நான்கு மாதங்கள் பயணித்து பூமிக்கும் புதன் கோளுக்கும் நடுவே, 15 லட்சம் கி.மீ தொலைவில் இருக்கும் எல்1 புள்ளியில் நிலைகொள்ளும்.

இந்தப் பயணத்தின் முதல்கட்டமாக பி.எஸ்.எல்.வி எக்ஸ்.எல் ராக்கெட் ஆதித்யா-எல்1 விண்கலத்தை பூமியின் நீள்வட்டப் பாதைக்குக் கொண்டு செல்லும். அங்கிருந்து சந்திரயான் திட்டங்களில் செய்ததைப் போலவே பூமியைச் சுற்றி வரும் ஆதித்யா, இறுதிக்கட்ட நீள்வட்டப் பாதையை அடைந்ததும் விண்வெளியிலேயே அதற்கு உந்துவிசை கொடுக்கப்பட்டு அங்கிருந்து எல்1 புள்ளியை நோக்கித் தள்ளப்படும்.

அதைத் தொடர்ந்து, பூமியின் ஈர்ப்பு விசைப் பிடியிலிருந்து விடுபட்டு எல்1 புள்ளியை நோக்கி ஆதித்யா விண்கலம் பயணப்படும்.

இப்படியாக நான்கு மாதப் பயணத்தில் எல்1 புள்ளியை அடையும் ஆதித்யா - எல்1 விண்கலம், மேலிருந்து கீழாக எல்1 புள்ளியில் சுற்றிக்கொண்டே சூரியன் குறித்த தனது ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கும்.

**ஆதித்யா - எல்1 திட்டத்தின் செலவு எவ்வளவு?**


எல்1 எனப்படும் புள்ளியிலிருந்து சூரியனை இந்த விண்கலத்தால் தொடர்ந்து அவதானிக்க முடியும். கிரகணங்களின்போது சூரியனை நிலவு மறைத்தாலும் அது ஆதித்யா-எல்1 விண்கலத்தின் கண்களில் இருந்து மறைய முடியாது. ஆகவே, அதனால் சூரியனின் செயல்பாடுகளை முற்றிலுமாக ஆய்வு செய்ய முடியும்.

இஸ்ரோ இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்பது குறித்த கணக்கை இதுவரை வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால் ஊடக செய்திகளில் இந்தத் திட்டத்திற்கு 3.78 பில்லியன் ரூபாய் செலவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

**சூரியனை எப்படியெல்லாம் ஆய்வு செய்யும்?**

சூரியனில் உள்ள கொரோனா எனப்படும் மேற்புற அடுக்குகளைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் சூரியனில் இருந்து வெளிப்படும் சூரியப் புயல் களை ஆய்வு செய்யவும் ஏழு கருவிகளை ஆர்பிட்டர் எடுத்துச் செல்கிறது.

கொரோனா அடுக்கு என்பது சூரியனில் உள்ள ஓர் மேற்புர அடுக்கு. சூரியனை சிறு வயதில் வரையும்போது அதைச் சுற்றி அலை அலையாகக் கோடுகளைத் தீட்டியிருப்போம். அந்த அலைகள் உண்மையாகவே இருக்கின்றன. சூரியனில் உள்ள அதீத வெப்பத்தின் வெளிப்பாடாக உள்ள இவற்றை







கொரோனா அடுக்கு எனக் கூறப்படுகிறது.

பூமியிலிருந்து நம்மால் பார்க்க முடிகின்ற சூரியனின் மேற்பரப்பு மற்றும் சூரியனின் அந்த மேற்பரப்பிற்கும் கொரோனா அடுக்குக்கும் இடையே இருக்கும் ப்ளாஸ்மா எனப்படும் மெல்லிய அடுக்கு ஆகியவற்றை அந்தக் கருவிகள் ஆய்வு செய்யும்.

சூரியப் புயல் போன்ற சூரியனின் செயல்பாடுகள் மற்றும் பூமியிலும் அதன் அருகே இருக்கும் விண்வெளிப் பகுதியிலும் உள்ள வானிலையில் அவற்றின் தாக்கம் ஆகியவற்றை விஞ்ஞானிகள் புரிந்துகொள்ள இந்த ஆய்வுகள் உதவும்.

**செயற்கைக்கோள்களை காப்பாற்ற உதவப் போகும் ஆதித்யா-எல்1**


“சூரியனின் கதிர்வீச்சு, வெப்பம், அதிலிருந்து வெளிப்படும் துகள்கள், காந்தப்புலங்களின் ஓட்டம் ஆகியவை பூமியின் வானிலையில் தொடர்ந்து தாக்கம் செலுத்துகின்றன. அதேநேரத்தில் அவை விண்வெளியிலும் தாக்கம் செலுத்துகின்றன,” என்கிறார் இஸ்ரோவின் முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை.

“செயற்கைக் கோள்கள் திறம்படச் செயல்படுவதில் விண்வெளியின் வானிலைக்கு முக்கியப் பங்கு உண்டு. சூரியப் புயல், செயற்கைக்கோள்களில் உள்ள மின்னணுவியலை பாதிக்கலாம். மின் கட்டங்களைத் தகர்க்கலாம்,” என்று பிபிசியிடம் கூறினார் மயில்சாமி அண்ணாதுரை.

இந்தியாவுக்குச் சொந்தமான 50க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்கள் விண்வெளியில் இருக்கின்றன. தகவல் தொடர்பு இணைப்புகள், வானிலை பற்றிய தரவுகள், வறட்சி, வரவிருக்கும் பேரிடர்களைக் கணிப்பது என அவை நாட்டிற்குப் பல முக்கியமான சேவைகளை வழங்கி வருகின்றன.

விண்வெளியில் தோராயமாக 10,290 செயற்கைக் கோள்கள் பூமியின் சுற்றுப் பாதையில் உள்ளன. அவற்றில் கிட்டத்தட்ட 7,800 செயல்பாட்டில் உள்ளன.

ஆகவே, சூரியனின் இயக்கவியலை ஆதித்யா-எல்1 மூலம் தெளிவாகப் புரிந்துகொள்வது, நமக்குப் பல வழிகளில் உதவக்கூடும் என்கிறார் மயில்சாமி அண்ணாதுரை. அவற்றை ஓரிரு நாட்களுக்கு முன்னமே அறிந்துகொள்ளவும் சூரியப் புயல் போன்றவற்றின் பாதையில் இருந்து செயற்கைக் கோள்களை நகர்த்தவும் இந்த ஆய்வுகள் உதவக்கூடும் என்கிறார்.



யதீந்திரா

# யாருக்கு வெற்றி யாருக்கு தோல்வி?


கடந்த மாதம் 29ம் திகதி, இந்தியாவின் கடற்படைக் கப்பல் ஐ.என்.எஸ் கஞ்சர் (Khanjar) திருகோண மலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டது. இந்தியா வில் தயாரிக்கப்பட்ட, குக்குரி வகுப்பு (Khukri-class) ஏவுகணை பொருத்தப்பட்ட கப்பல். அன்று மாலை ஒரு வரவேற்பு விருந்துபசாரமும் இடம்பெற்றது. இந்த நிகழ் வில் பங்குகொள்வதற்கான வாய்ப்பு எனக்கும் கிடைத் தது. யூலை - 29ம் திகதி, இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதி. இவ்வாறானதொரு திகதி யில், இந்திய கடற்படைக் கப்பலின் வருகை தற்செயலானதுதான் ஆனால் முக்கியத்துவம் மிக்கது. 1990ம் ஆண்டு, மார்ச் மாதம் 24ம் திகதி, ஐ.என்.எஸ் துருப்புக்காவி கப்பல், மகர் (INS troop ship Magar) இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபைக்காக செயற் பட்டவர்களையும் உள்ளடக்கியவாறு, இந்திய அமைதிப்படையின் கடைசித் துருப்புக்களுடன், திரு கோணமலை துறைமுகத்திலிருந்து வெளியேறியது. அத்துடன் வடக்கு கிழக்கில், நிலைகொண்டிருந்த, 50,000 இந்திய அமைதிப் படையின் 32 மாதகால சகாப்தம் முடிவுற்றது. குறித்த கப்பலை, தமிழ் நாட்டு துறைமுகத்தில் நிறுத்துவதற்கு, அப்போதைய தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதி அனுமதிக்கவில்லை. மார்ச் மாதத்தில், வடகிழக்கு மாகாண சபையை கலைத்த, அண்ணாமலை வரதராஜப் பெருமாள், தனி நாட்டுக்கான பிரகடனம் ஒன்றை முன்வைத்திருந்தார். இதனை காரணம் காண்பித்தே, கருணாநிதி, தமிழ் தேசிய இராணுவத்தின் உறுப்பினர்கள், தமிழ் நாட்டுக் கள் நுழைவதற்கான அனுமதியை மறுத்தார். இதனைத் தொடர்ந்து, கேரள துறைமுகத்திலும் குறித்த கப்பல், அனுமதிக்கப்படவில்லை. இறுதியாக. ஒடிசாவின் விசாகபட்டினத்தில்தான் குறித்த கப்பல் நங்கூரமிடப் பட்டது. கடந்த மாதம் யூலை29 இல், திருகோணமலை துறைமுகத்தில் தரித்துநின்ற ஐ.என்.எஸ் கஞ்சர், விசாக பட்டணத்திலிருந்தே அதன் பயணத்தை ஆரம்பித்தி ருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு, பிரேமதாச அரசாங் கத்துடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதை தொடர்ந்தே, இந்திய படைகள் வடக்கு கிழக்கிலிருந்து முற்றிலுமாக வெளியேற்றப்பட்டது. இந்தியா, வடக்கு கிழக்கில் அதன் செல்வாக்கை இழந்துவிட்டதாக,



முக்கியமாக, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த திரு கோணமலை துறைமுகத்தை இழந்துவிட்டதாக, அப் போது, நியூயோர்க்ஸ் டைம்ஸ் பத்திரிகையில் கட்டுரை யொன்று வெளியானது. 2023, யூலை, 29ம் திகதி, இந்திய கடற்படை கப்பலின் நிகழ்வில் மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருக்கும் போது, எனக்கு இந்த விடயங் களே நினைவுக்கு வந்தது. இதனை கப்பலின் கேப்டனி டம் தெரிவித்தேன். இதெல்லாம் உங்களைப் போன்ற புத்திஜீவிகளுக்கான விடயமென்று கூறி, சிரித்துக் கொண்டார்.

இலங்கை விடயத்தில் இந்தியாவின் நேரடியான தலையீடு தோல்வியடைந்தது. அன்றைய சூழலில், இது தொடர்பில் இந்தியா கடும் அதிருப்தியுற்றது. குறிப்பாக பிரேமதாச மீது அவர்களுக்கு கோபம் இருந்தாலும் கூட, இந்திய படைகளுடன் விடுதலைப் புலிகள் மோதி யமை, இந்தியாவின் வெளியேற்றத்திற்காக பிரேமதாச வுடன் இணைந்து கொண்ட விடயங்களே, இந்தியாவை பொறுத்தவரையில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, இலங்கையின் உள்நாட்டு அரசி யல் பிரச்சினையில் தலையீடு செய்வதிலிருந்து இந்தியா விலகிக்கொண்டது. இந்தியா விலகியிருக்க வேண்டு



மென்பதே விடுதலைப் புலிகள் அமைப்பின் விருப்பமா கவும் இருந்தது.

இந்தியா விலகிய பின்னரான 30 வருட காலப்பகுதி யில் இலங்கையில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்று விட்டன. ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை காணும் விடயத்தில், இந்திய - இலங்கை ஒப்பந் தத்தை தாண்டி இரண்டு தரப்புக்களாலுமே நகர முடிய வில்லை. இது எங்களின் உள் விவகாரம், நாங்கள் இதனை பார்த்துக் கொள்கின்றோமென்று கூறித்தான், இந்திய படைகள் வெளியேற்றப்பட்டன. ஆனால் இந்தியா இல்லாமல் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியுமென்று கூறியவர்களால் ஒரு அடி கூட முன் னோக்கி நகர முடியவில்லை. இந்தியா இல்லாமல், தனி நாடு ஒன்றை காண முடியுமென்று கூறித்தான், விடு தலைப் புலிகள் அமைப்பும், தனி வழியில் சென்றது. ஏராளமான உயிர் தியாகங்களையும் செய்தது. பெருந் தொகையான மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இப் போது, 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் தலையீட்டை தமிழ் கட்சிகள் கோருகின் றன. எங்களுடைய பிரச்சினையை நாங்களே பேசித் தீர்த்துக் கொள்வோமென்று கூறிய சிங்கள தரப்புக் களாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வை காண முடிய வில்லை. இந்தியா எங்களுக்குத் தேவையில்லை, வெளியேறு - என்று கூறிய தமிழர்களாலும் வெற்றிபெற முடியவில்லை. இப்போது தோல்வியடைந்திருப்பது யார்?

சந்தர்ப்பங்களை தவறி விட்டால், அது எவ்வாறான நிலைமையை ஏற்படுத்தும், ஒரு இனத்தை எந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்பதற்கு ஈழத் தமிழினம் ஒரு வாழும் சாட்சி. ஈழத் தமிழரின் இந்த நிலைக்கு யார் காரணமென்று கேட்டால், இந்தியாவை நோக்கி, அமெரிக்காவை நோக்கி விரல் நீட்டுவதற்கு, நம் மத்தியில் இப்போதும் பலருண்டு. ஆனால் இந்தியாவும் அமெரிக்காவும் முன்னர் எவ்வாறு சிந்தித்தனரோ, அவ்வாறுதான் இப்போதும் சிந்திக்கின்றனர். அவர்கள் எப்போதும் அப்படித்தான் இருப்பார்கள். பலம்பொருந் திய நாடுகளை வழிநடத்துவது அவர்களின் நலன்கள் மட்டுமேயாகும். அவர்களது நலன்களுக்குள் நமது நலன்களை தேடுவதில் வெற்றிபெற முடிந்தால், அதுவே ஈழத் தமிழனத்தின் வெற்றியாக இருக்கும் ஆனால், அவ்வாறானதொரு வெற்றியை நம்மால் பெற முடிய வில்லை. வெற்றிக்கான வாய்ப்புக்களை நாங்கள் தவற விட்டுவிட்டோம். இப்போது இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, வாய்ப்புகளுக்காக காத்திருப்பதை மட்டுமே ஈழத் தமிழர் தலைமைகள் என்போர் செய்ய முடியும்.

இந்தியா தொடர்பில் ஈழத் தமிழ்ச் சூழலில் போதிய புரிதல் இருந்திருக்கவில்லை. இது சர்வதேச அரசியலை புரிந்துகொள்வதிலுள்ள பலவீனத்தின் விளைவு. இந்தி யாவை எட்ட வைக்க வேண்டும், இந்தியா இல்லாமல் விடயங்களை கையாள முடியுமென்னும் சிந்தனை யானது, இந்த அரசியல் புரிதலிலுள்ள, பலவீனத்தின் விளைவுதான். ஆரம்ப காலத்தில் இந்த விடயத்தில் போதிய புரிதல் இல்லாமலிருந்ததை மன்னிக்கலாம். ஆனால் ஒரு கட்டத்திற்கு பின்னர் அவ்வாறான புரிதல் ஏற்படாமல் போனதுதான் தவறானது.

இந்தியா எக்காலத்திலும் தவிர்க்க முடியாத ஒரு சக்தி. இது நமது விருப்பு வெறுப்புக்கள் தொடர்பான விடயமல்ல. சர்வதேச அரசியலை விருப்பு வெறுப்புக் களிலிருந்து நோக்கினால் நம்மால் ஒரு போதுமே விடயங்களை புரிந்துகொள்ள முடியாமல் போகும். இது தொடர்பில் எனது முன்னைய பத்திகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். அதே போன்று, நீதி, அநீதி, தர்மம் என்னும் சொற்கள் கொண்டும் சர்வதேச அரசி யலை உற்று நோக்கக் கூடாது. அவ்வாறு நோக்கினா லும் நாம் விடயத்தை தவறவிட்டு விடுவோம். ஒரு காலத்தில், தமிழ் இயக்கங்களின் மத்தியில், உலகெங்கும் ஒடுக்கப்பட்ட சக்திகளோடு நாங்கள் தொடர்புகளை பேணிக்கொள்ள வேண்டும், அவர்களின் ஆதரவை திரட்டிக் கொள்ள வேண்டுமென்னும் பார்வை மேலோங்கியிருந்தது. தங்களை ஒரு புரட்சிகர சக்தியாக எண்ணிக் கொண்டன் விளைவாகவே, இவ்வாறான பார்வையை பலரும் வரித்துக் கொண்டனர். ஆனால் இதற்கு மாறாக அரசுகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் சிந்தித்திருந்தால், அது, நமக் கான அங்கீகாரத்தை பெறுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும்.

இந்தியாவுடனான தொடர்பு, இயக்கங்களுக்கு அவ்வாறான அங்கீகாரத்தையே வழங்கியது. திம்பு பேச்சுவார்த்தையின் மூலம், இயக்கங்களின் அதுவரை யான ஆயுத நடவடிக்கைகள் அனைத்துக்கும் அரசியல் பெறுமதி கிடைத்தது. இந்தியாவின் தலையீட்டி னால்தான் அந்த வாய்ப்பு கிடைத்தது. அதன் நீட்சிதான் இந்திய-இலங்கை ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தை பயன் படுத்துவதன் மூலம் மட்டும்தான், தமிழர் அரசியலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியுமென்னும் நிலை மையே அன்றிருந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கம் அதனை எதிர்ப்பதன் மூலம், அடுத்த கட் டத்தை நகர்த்த முடியுமென்று நம்பியது. இந்தியாவை விரோதித்துக் கொள்வதன் ஊடாக, அடுத்த கட்டத் திற்கு செல்ல முடியுமென்று நம்பியது. அதற்காக செயற் பட்டது. அதன் விளைவு, இப்போது தமிழர்களை ஒரு இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றது. இந்த இடத்திலிருந்து எங்கு செல்வது - செல்ல முடியுமா என்னும் கேள்வியுடன்தான், கடந்த 14 வருடங்களாக, மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றோம்.

விடயங்களை திரும்பிப் பார்த்தால் ஒரு படிப்பினை நமக்கு முன்னாலிருக்கின்றது. சில விடயங்களை ஏற்றுக் கொண்டு செல்ல மறுக்கின்ற சந்தர்ப்பங்களில், நாங்கள் மேலும் மோசமான பின்னடைவுகளை சந்தித்திருக் கின்றோம். 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு, மாகாண சபையில் பங்குகொள்ளும் முடிவை அனைவருமாக எடுத்திருந்தால், அதிலிருந்து முன்னோக்கி பயணித்திருக்கலாம். இங்கு விடயம் எவ்வளவு அதிகாரங்கள் கிடைக்கின்றன என்பதல்ல முக்கியம், முன்னோக்கி செல்வதற்கு நமக்கு எந்தளவு



வாய்ப்புண்டு என்பதை மட்டுமே நோக்க வேண்டும். இந்த இடத்தில் இணங்கிச செல்ல மறுத்ததால், அரசியல் சூழ்நிலை முற்றிலும் மாற்றமடைந்தது. நண்ப ராக இருந்த ஒரு பிராந்திய சக்தி நம்மிலிருந்து விலகிச் சென்றது. இந்தியாவின் பார்வையில், ஈழத் தமிழர் நம்பிக்கைக்குரிய தரப்பல்ல என்னும் நிலைமை உருவாகியது. அவ்வாறு இந்தியா கருதினால், அது தவறான பார்வையல்ல. ஏனெனில் அவ்வாறான சம்பவங்களே நடந்திருக்கின்றன.

இரண்டாவது, சந்தர்ப்பம், ஒஸ்லோ பேச்சு வார்த்தை. அப்போதும் தனிநாட்டுக்கான மாற்றுத் தீர்வொன்றை சர்வதேச அரங்கில் முன்வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதனை விடுதலைப் புலிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்தக் காலத்தில், தென்னாபிரிக்க ராஜதந்திரி, தற்போது தென்னா பிரிக்காவின் ஜனாதிபதியாக இருக்கும் சிறில் ரமபோசா, ஒரு தனிப்பட்ட கலந்துரையாடலில், இப்படிக் கூறினாராம். எங்களுடைய அனுபவத்தில் உங்களுக்கு ஒன்றை சொல்வேன். இப்போது கிடைத்திருக்கும் இந்த சந்தர்பத்ததை பயன்படுத்திக் கொண்டு ஏதாவது, ஒரு தீர்வுக்கு நீங்கள் செல்லவில்லையென்றால், இந்த யுத்தத்தில் நீங்கள் தோற்கடிக்கப்படுவீர்கள், நீங்கள் 40 வருடத்திற்கு பின்நோக்கிச் செல்வீர்கள். இறுதியில் அதுதான் நடந்திருக்கின்றது. 36 வருடங்களுக்கு முன்ன ரான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக் கப்பெற்ற, 13வது திருத்தச்சட்டத்தை நோக்கி, அதனை யாவது, பாதுகாக்க முடியுமா என்னும் கேள்வியுடன் எங்களுடைய அரசியல் நாட்கள் நகர்கின்றன. அதற்கும் இந்தியாவின் ஆதரவில்லாமல் சாத்தியமில்லை யென்னும் நிலையில்தான் நாமிருக்கின்றோம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# கடன் மறுசீரமைப்பு முயற்சிகளில் ஜப்பானின் பங்கேற்புக்கு பாராட்டு

## ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்

கொழும்பு, செப். 04

இலங்கையின் வெளிநாட்டு கடனை மறுசீரமைப்பதற்கான சர்வதேச முயற்சிகளில் ஜப்பானின் பங்கேற்பை பாராட்டுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் என். எச். கே ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அந்த நேர்காணலில் மேலும், அவர் தெரிவித்தவை ,

இலங்கையின் கடன் நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கில் இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்ட புதிய சர்வதேச கட்டமைப்புக்கு ஜப்பான் இணை தலைமைத்துவம் வழங்குகின்றது.

ஜப்பானின் இந்த பணி, சம்பந்தப் பட்ட அனைத்து தரப்பிற்கும் வசதியாக அமைந்துள்ளது.

“சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ- பசுபிக்“ கனவை நனவாக்கும் முயற்சியில் ஜப்பான், இலங்கையை ஒரு முக்கிய பங்காளியாக கருதுகிறது. அதே போன்று “பெல்ட் அண்ட் ரோட்“ என்ற பெயரில் தொடங்கப்பட்டு தற்போது உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சி என பெயரிடப்பட்டுள்ள திட்டத்தில் சீனா, இலங்கையை ஒரு பங்காளியாக கருதுகின்றது.

சீனாவிற்கான கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து, 2017 ஆம் ஆண்டில், நாட்டின் தெற்கில் உள்ள (அம்பாந்தோட்டை) ஒரு துறைமுகத்தின் நிர்வாகத்தை சீன நிறுவனத்திடம் 99 ஆண்டு குத்தகைக்கு ஒப்படைக்க நேரிட்டது.

துரதிஷ்டவசமாக கடன் பிரச்னைகளை கையாளுவதற்கு சீனாவிடம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமை (JICA) போன்ற முகவர் நிலையங்கள் இல்லாததன் காரணமாக இவ்வாறு வழங்க வேண்டி ஏற்பட்டது.

எவ்வாறாயினும் சீன நிறுவனத்தினால் நடத்தப்படும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கமே கட்டுப்படுத்துகிறது. அத்துடன் ஜப்பானின் கடல்சார் தற்காப்புப் படை கப்பல்களுக்கும் இலங்கை துறைமுகத்துக்கு வருவதற்கான அழைப்பை விடுத்துள்ளதாகவும் - ஜனாதிபதி கூறினார்.

(ஐ)

## யாருக்கு வெற்றி....?

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுள்ள, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. ஜெயசங்கர், இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில், கொழும்பிலுள்ள, இந்தியத் தூதரகத்தில், அரசியல் செயலராக கடையாற்றிக் கொண்டிருந்தார். விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை தொடர்ந்து, மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு அனைவரும் தயங்கிய போது, அவர் நேரடியாகவே சிலரிடம் பேசியதாகக் கூட தகவலுண்டு. இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்துங்கள். தவறவிடாதிர்கள் என்று அவர் கூறியிருக்கின்றார். இன்று காலம் எவ்வாறு நகர்ந்திருக்கின்றது? இன்று அவரிடம் சென்று, 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உதவுங்கள், மாகாண சபை தேர் தலை விரைவாக நடத்துவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று நாம் கோருகின்றோம். இது எதனை உணர்த்துகின்றது? அன்று சந்தர்பம் நமது காலடியில் கவனிப்பாரற்று கிடந்தது. இன்றோ, பயன் படுத்தத் தவறியதை, மீண்டும் பயன்படுத்துவதற்கு வாய்பொன்றை தருமாறு இரந்து நிற்கின்றோம்? நாங்கள், எங்களை அரசியல் தெரிந்த சமூகமென்று கூறிக் கொள்ள முடியுமா? எங்கள் இதுவரையான பெருமைகளுக்கு ஏதாவது அர்த்தமுண்டா?

1990இல் இறுதி துருப்புக் காவிக் கப்பலில் வெளியேறிதன் மூலம், இந்தியா எதனையும் இழக்கவில்லை. 36 வருடங்களுக்கு பின்னர், அன்றை ஒப்பந்தத்தின் அடிப்படையில் திருகோணமலை மீதான அதன் செல் வாக்கை மீளவும் உறுதிப்படுத்துகின்றது. தென்னிந்தியா விற்கும் - திருகோணமலைக்கும் இடையில் எண்ணை குழாய்களை பொருத்துவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. இந்தியா மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துமைமுகத்தின் மீதான அதன் செல் வாக்கை இழக்கவில்லை. இழக்கவும் மாட்டாது. இழந்தெல்லாம் ஈழத் தமிழர்கள் மட்டும்தான். இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில், திருகோணமலையின் பெரும்பாண்மை சமூகமாக தமிழர்கள் இருந்தனர். திருகோணமலை தலைமையாகக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையின் தலைமைக் காரியாலயம் இயங்கியது. அனைத்தும் தமிழரின் கட்டுப்பாட்டில் இருந்தது. இப்போது எதுமில்லை. இப்போது யாருக்கு வெற்றி - யாருக்கு தோல்வி?

## சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகநபர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், செப். 04

காரைநகரில், சிறுமியை துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைது செய்ய முற்பட்டவேளையில் அவர் தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

அவரை மீட்ட பொலிஸார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனது மனைவியின் சகோதரியின் மகளான சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில், நேற்று அவரை பொலிஸார் கைது செய்ய முற்பட்டபோது அவர் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

தற்போது பொலிஸ் பாதுகாப்பில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

